


நீலமணி

# பாற்கடல் திவலைகள்

894.8111
நீலம

# உள்ளிருப்பு


| | |
|---|---|
| அழைப்பு (1958) | 5 |
| நங்கையும் நாவுக்கரசும் (1958) | 10 |
| வேண்டாத வேலிகள் (1959) | 16 |
| இரவில் இராமலிங்கர் (1959) | 30 |
| நிலவுக் கொப்புளம் (1963) | 39 |
| புண் கிண்ணம் (1963) | 48 |
| எண்சாண் சாம்பல் (1963) | 62 |
| தண்ணீரே தாயே! (1964) | 70 |
| அங்கவையே அக்கா! (1964) | 74 |
| மேகலை (1964) | 77 |
| கண்ணீர்க் கண்ணகியும் காதல் மன்னனும் (1964) | 95 |
| இனித்த சுமை (1967) | 100 |
| எச்சில் ஊஞ்சல் (1969) | 107 |
| நன்னன் கடித்த கன்னல் (1977) | 116 |



# அழைப்பு

காவிரிமண் ஆண்டுவந்த சோழன், போரில்
கண்சிவப்பால் பகைவர்களை ஓட்டும் மன்னன்;
பாய்விரித்த கலம்வந்து தங்கு கின்ற
பட்டினத்தான்; குலோத்துங்கன்— அவைக்க ளத்தில்
பாவடித்துத் தருகின்ற கம்பன், ஓர்நாள்,
பாதத்தில் செம்பஞ்சுக் குழம்பு பூசும்
பூவையிடம் பேசுகிறான். அவளோ ஊரின்
பொதுவுடைமை; என்றாலும் தயங்கு கின்றாள்.

கூந்தல்நிற இரவுஇது. கிழக்கு வானில்
குளத்துத்தா மரையிலைபோல் நிலவு வட்டம்
நீந்துவதைப் பார்க்கின்றோம். இனித்த காதல்
நினைவுகளாய் இதுஉனது நெஞ்ச கத்துட்
பாய்ந்திடுமே! நாணமென்னும் கதவைச் சாத்திப்
பாதிக்கு மேல்இரவை வீணாக் காதே!
ஏந்திழையே! அறுத்துவிடு கயிற்றை! இன்பம்
என்கின்ற வெள்ளத்தில் ஓடம் ஆவோம்!

தகர்த்தெறிந்து வரும்புயலைப் பிடிக்கப், பூச்சி
தரும்எச்சில் ஒட்டடையால் வலையின் ருதே!
அகத்தெழுந்த ஆவலுக்கு முன்னுல்—நாணம்
அணையாகி வென்றதென்ற கதையே இல்லை!
சிகப்புவண்ணம் மேற்றிசையில் மறைந்தா யிற்று—
சேரட்டும் அந்தநிறம் உனது கண்ணில்!
திகட்டாத இனிப்பே! நீ விரைந்து வா! வா!
தீபத்தின் கண் இமையைச் சற்றே மூடு!

செப்புவைத்து விளையாடும் வயது நீங்கிச்
செழித்தகொடி ஆகிவிட்டாய்; ஆனுல் தங்கச்
செப்புவைத்து விளையாடும் பித்தை, என்பால்
சேர்ப்பித்து விட்டாயே! அன்பே! உன்னே(டு)
ஒப்புவைத்துக் கூறுதற்குத் தகுதி யாக
ஓர்அழகி கூடஇல்லை இந்த நாட்டில்;
உப்புவிற்கும் ஒரேகடையும் மூடி விட்டால்,
உணவுக்கு எப்படிநான் உப்பு சேர்ப்பேன்?

முனைமுறியா நெல்லே!உன் ஒளிமி குந்த
முகம்பார்க்கும் கண்ணுடி என்கண் அன்ருே?
சுனைநீர்போல் புதிதுபுதி தாக இன்பச்
சுவைகாட்டும் பெண்ணமுதே! ராம காதை
புனைவதற்கு— நீதானே உணர்ச்சி தந்து
புகழ்நதியை என்பக்கம் திருப்பு கின்ருய்!
நனையட்டும், அழியட்டும், நமது மார்பின்
நறுஞ்சந்த னப்பூச்சு, உறவி ஞலே!

கண்பேச்சுப் பேசு! அந்தப் பேச்சே, என்றன்
கவிதைகளின் கருவாகும். தேவ மாதர்,
தண்ணீரில் குளிக்கையிலே உலரப் போட்ட
தங்களது சேலைகளே வான வில்லாய்
விண்ணில்உள எனப்புதிய பாடல் சொல்வேன்.
வீணை நரம் பைப்போன்ற இழைநீள் கூந்தல்
கொண்டவளே! என்குன்றத் தோளில் தோயும்
குளிர்ச்சிநில வே! இரவு விழாத்தொ டங்கு!

ஆனைக்கொம் பைப்போன்ற வாளை ஏந்தும்
அரசனது அவைக்கவிஞன் — என்ப தாலே
தேனடை - நீ எனைக்கண்டு அஞ்சு வானேன்?
திசைக்குதிசை முகில்நகர்வ துண்டு; காற்றால்
வானநிலா நகராதே! அதுபோல், உன்றன்
வாய்இனிப்புப் பெறுவதனால் எனது பீடு
ஊனம்எதும் அடையாது! உதட்டு வாழ்வில்
உயர்ந்தகுலம் தாழ்ந்தகுலம் ஏது பெண்ணே?


தீக்கொழுந்தைப் போல்மெலிந்த ஆடை — உன்றன்
தேகத்தை மறைக்கின்ற தொழிலில், தோற்றுப்
போய்க்கொண்டி ருப்பதனை அறிவாய்! அன்பே,
பொன்னிறத்தை மறைக்கும்இது! உருவைக் காட்டும்!
நோக்குகின்ற விழிஅம்பு; யானைக் கொம்பு;
நூறுபடை உனக்கு(உ)ளது — என்றா லும்நான்
போர்க்கஞ்சப் போவதில்லை; தோல்வி கண்டு
பூரிப்பேன்; உயிர்ப்படமே அருகில் வாராய்!

பாண்டிமுத்துச் சிரிப்பாலே மயக்கம் தா! நான்
பாடல்தீட் டும்ஓலை நறுக்கே! சோழன்
ஆண்டுவரும் நாட்டுவயல் நாற்று கட்கு
ஆற்றின்நீர் தேவை; என்றன் உயிர்த ழைக்க
வேண்டுமடி உன்இன்பம்! சேரன் குன்றில்
மேய்ந்துவரும் நறுங்காற்று நம்கு றுக்கே
தாண்டிப்போ காதபடி இருப்போம். செம்மைத்
தமிழ்க்குறளைச் செயலாக்கி மகிழ்வோம் பெண்ணே!

காளைவய துள்ளமகன் இருக்க, இங்கே
காதல்செய்ய வந்தானே கம்பன் - என்று
பாளைமுறு வற்காரி நீநி னைப்பாய்!
பசுந்தமிழை அமுதென்பர்; அமுதை ஒவ்வோர்
நாளும்அருந் திடுவோன்நான். அதனால், எண்ண
நரம்புகளில் தளர்வென்றும் ஏற்ப டாது!
கேளிக்கைப் பொய்த்தூக்கம் கொள்ள, நம்மில்
கேள்விமுறை வேண்டாமே! ஏன்த யக்கம்?

குலையாத அழகுள்ள மேனி— என்று
குறிப்பிடுவ தற்காக, மலரே! உன்னைச்
சிலை—என்று சொன்னேன்நான். அதனால் உண்மைச்
சிலைபோல்நீ உலோகமனம் கொள்ள லாமா?
உலைஆவிச் சூடுள்ள என்கோ ரிக்கை
ஒன்றேனும் உன்மனத்துட் புகக்கா ணேமே!
கலையில்ஒரு கலையும், அதன் கலைவில் மற்றோர்
கலையும்காட் டும்கலையே! தாகம் போக்கு!

தோமுந்தூர்ப் பெருங்கவிஞன் இவ்வா ருகத்
தித்திப்பு நடத்தைக்கு அழைக்க, அந்தக்
காரிகையோ, காதலுக்கு வேலி போட்டுக்
கால்விரலால் நிலங்கீறி நின்ருள். பின்னர்
நீரற்ற வெண்முகிலாய் இருக்கும் கம்பன்
நெஞ்சுக்கு இன்பத்தால் கருமை சேர்க்கப்
பேரழகி மனமுடிவு செய்து விட்டாள்:
பேச்சில்லா உரையாடல் ஆரம் பித்தாள்.



# நங்கையும் நாவுக்கரசும்

திருப்புகலூர் சத்திரத்தில் அமர்ந்து, நீலத்
திரைபோன்ற வானத்தைப் பார்த்துக் கொண்டு
இருந்திட்டார் திருநாவுக் கரசர். வான
இருட்பரப்பில் விண்மீன்கள் ஒவ்வொன் ருக
நெருப்புமலர் போல், மலர்தல் கண்டார். காக்கை
நிறச்சட்டி யில்பொறியும் பொறிகள் என்று
உரைத்திடலாம் அவற்றைஎன்ப தாக அப்பர்
உள்ளத்தில் தோன்றிற்று ஊமை எண்ணம்.

வழிகளிலே முளைக்கின்ற புல்லை, வெட்டி
வகைப்படுத்த உதவுகின்ற கருவி— இந்த
உழவாரம். மனிதர்களின் தன்நலத்தை
ஒழிப்பதற்கு அன்பேதான் கருவி! —என்று
கிழஅறிஞர் உதட்டுக்குள் சொல்லிக் கொண்டார்.
கெண்டையைப்போல் உருக்கொண்ட விளக்கு நாக்கு
பிழம்புடலை ஆட்டிற்று, அவரின் ஞானப்
பேச்சுக்குத் தலைஅசைத்து 'ஆம்'போட் டாற்போல்

நீலமணி

பயன்உள்ள சிந்தனையைச் சுமக்கும் நெஞ்சு,
பழப்பருவம் —இவற்றோடு, சைவம் வாழச்
செயல்புரியும் நாவரசர்— தம்மை நோக்கிச்
சிலம்போசை வருவதனைக் கேட்டார். சற்றே
தயங்குகின்ற நடைபோட்டு ஒருத்தி வந்து
தம்அருகில் நிற்பதனைக் கண்டார். மோதும்
புயற்காற்றைத் தென்றலொடு சமமாய் எண்ணும்
புனிதர்,விழி உயர்த்திஅவள் முகத்தைப் பார்த்தார்.

துள்ளுகின்ற பசுக்கன்று இயக்கம். வண்டு
தூங்குகின்ற காலைப்பூ உடம்பு. தொட்டுக்
கிள்ளுகின்ற விரலுக்கு வெல்லம். அந்தக்
கிளிபேச லாயிற்று; நீர்ரூ பத்தில்
உள்ளபொருள் ஒவ்வொன்றும் அமைதி யாக
உறைவதற்குத் திடஉருவில் வேலி தேவை!
கள்உதட்டுப் பெண்களுக்கோ— ஆணின் அன்பு
கட்டாயம் தேவை!இதை அறிந்தி ருப்பீர்!

மணமில்லா மலருக்கு மதிப்பு என்ன?
மணம்புரியார் தம்மதிப்பும் அதுவே தானே!
உணவுவகை ஏந்தாத தங்கத் தட்டால்
உபயோகம் ஏது? முல்லைக் கொடிக்குத் தேரைத்
துணையாக நிறுத்திவைத்த பாரி, உங்கள்
துறவறத்தைப் பாராட்ட மாட்டார். ஒற்றைக்
கணையாக இருக்கின்றீர் — நாண்தொ டாமல்
களப்போரில் வெற்றிகிடைக் காதே, ஸ்வாமி!

புதைத்துவைத்த தனமாக வாலி பத்தைப்
போக்கியது அறிவுடைமை தானு? உங்கள்
மதுக்கோப்பை ஆவதற்கு நிரம்ப நாளாய்
மனங்கொள்ளாப் பித்தெனக்கு! கோடை நுங்குச்
சதைபோன்ற பளிங்குக்கல் தாழ்வா ரத்தில்—
சந்திரனின் ஒளிமழையில்— நனைந்த வாறே
கதைபேசு வோம், கனவு காண்போம். காக்கை
கரைகின்ற வேளைவரை இனிப்போம் வாரீர்!

குவளையிலே நறும்பச்சைப் பாலை வைத்தால்
குந்திக்கொண் டிருக்கும்அது சும்மா, ஆனல்
பவளநிறத் தீயின்மேல் வைத்தால், அந்தப்
பால்திரவம் பொங்காதோ? என்றன் நெஞ்சு
தவிக்கிறது என்ருல், தீ யாக ஆவல்
தகிக்கிறது எனே, என்று தானே அர்த்தம்!
அவலுக்குப் பால்சேர்த்தல் பொருத்தம். என்றன்
அழகுக்குப் பொருந்தியவர் நீங்கள் தானே!

கூழ்ஆக்கும் சுள்ளிகளைப் போன்ற எண்ணம்
கொடுப்பதில்லை நீங்கள். உயர் இசைஅ ளிக்கும்
யாழ்ஆக்கும் மரம்போன்ற கருத்தே சொல்வீர்!
யான், இதனுல்— உம்மைமிக மதிப்பேன். ஆற்றுக்
கூழாங்கல் தலையுடையீர்! அதனு லேதான்
குளிரோடைக் காதல்சுவை துய்த்தி டாமல்
பாழாகும் உங்களது வாழ்வில்— காதல்
பயிர்செய்ய, பழத்தோட்டம் விளைக்க வந்தேன்!

நீலமணி

அந்திவந்தால் விளக்கெரிய வேண்டும். மேகம்
ஆகாயப் பொட்டலிலே வந்து, ஈரப்
பந்தலிட்டால், வாழைஇலை போன்ற தோகை
பனைஓலை போல்விரிந்து நீலம் காட்ட
நந்தவன மயில்ஆட வேண்டும். சைவ
நாவலரே! பருவநிலை வந்தால்— வாசச்
சந்தனமும் பன்னீரும் வாழ்த்தக், காதல்
சரித்திரத்தைத் தொடங்கத்தான் வேண்டும்— மக்கள்!

துறவறத்தைப் பலர்மதிக்கக் கூடும்; மக்கள்
தொழுகின்ற காரணத்தால், கோபு ரத்தில்
நிறுவியுள்ள கலசம், நாம் மதித்து ஏறும்
நேர்வரிசைப் படிகளைப்போல் பயனு நல்கும்?
புறத்தாறு எனஅறிஞர் துறவைச் சொன்னார்;
போவானேன் அவ்வழியில்? முத்தை விட்டுப்
பொறுக்காதீர் பரற்கல்லை! கவிதை கேட்டால்
பூரிப்பீர்; வாய்வெருவல் தருமா இன்பம்?

வீணையென்மேல் உம்விரல்கள் நடமா டட்டும்!
வீணாக லாமாநான் இசைத ராமல்?
தோணிஇருக் கும்போது ஆற்று நீர்மேல்
துடுப்பசைக்கத் தயங்குவது அழகா? வெற்றுக்
காணிநிலம் வேண்டும்என்று தொடங்கு வோரும்
கன்னிஒருத் தியும்வேண்டும் என்று தங்கள்
ஆணுள்ளம் காட்டித்தா னேமு டிப்பார்!
அதற்கென்ன நீர்மட்டும் விலக்கா? சொல்வீர்!

பற்களைநீர் பாளைஎன்று சொல்வீர். அந்தப்
பாளையிலே ஊறுகின்ற சாற்றுக் கள்ளைச்
சற்றேநீர் அருந்திப்பார்த் தால்தான் என்ன?
சாத்திரமா கெட்டுவிடும்? என்னை நீங்கள்
பொற்றும ரைக்குளமே— என்ற ழைத்தால்
போதாது. அக்குளத்தில் நீந்த நீங்கள்
கற்றிடுதல் மிகத்தேவை! பிறகு ஈச்சைக்
கனிவண்ண இருள்—இனிக்கக் கேட்க வேண்டாம்!

வாழைப்பூப் போலிருக்கும் இதயம்— மூடி
வைக்கப்பட் டிருக்கின்ற மார்பு— ஆளும்
சோழனது கப்பற்பாய், மோது கின்ற
சூறையிலே விம்முதல்போல் விம்மல் காணீர்!
ஆழமுள்ள தமிழறிவு கொண்ட உம்மேல்
ஆசைவைத்த தால்எனக்கு இதுதான் லாபம்!
ஈழத்தீ வைப்போன்ற உருவம் உள்ள
இலையாக மதிக்கின்றீர், கனியாம் என்னை!

வாதம்என்ருல் சொல்தேவை என்று சொல்லும்
வாக்கியத்தின் பொய்மைதனை உணர்ந்து காண்போம்.
மாதுளம்பூ உதட்டுநிறம் வெளுத்து, இந்த
மாதுளம்பூ ரிக்கட்டும்! யானைக் கால்தூண்
மீதினிலே சாய்ந்திருக்கும் நீங்கள் என்மேல்
மெல்லத்தான் சாய்ந்திடுவீர்! பூந்தோட் டத்தில்
காதல்விளை யாட்டுக்கள் ஆரம் பிப்போம்—
கறுப்பிருட்டை அணிந்தபடி மகிழ்ச்சி கொள்வோம்!

சுகம்கொடுக்கும் பெண்பறவை, பருவ மங்கை
சொன்னபடி இருந்திட்டாள் காதல் வார்த்தை.
நகம்போல வளைந்திருக்கும் ஓடும், பொன்னும்
நமக்குஒன்றே யாகும்என எண்ணும் அப்பர்,
'அகப்பாட்டு எழுதுகின்ற விருப்பம், இந்த
அகவையிலே எனக்கில்லை'— என்றார். சொல்லில்
அகப்படுத்த முடியாத அழகி, 'என்றன்
அனுதாபம் உங்களுக்கு'—என்றாள். சென்றாள்.



# வேண்டாத வேலிகள்

'சொல்லிஅறி வதுஅல்ல என்று, காமச்
சுகக்கலையைக் குறிப்பிடுகின் றார்கள். கொம்பைப்
புல்லுதற்குத் தேடுகின்ற கொடியே! உன்றன்
பொன்உடம்பு சொலும்பாடம் கேட்டுக், கூட்டுக்
கல்வியிலே நான்அறிஞன் ஆகி விட்டேன்.
கண்ணுக்கோ — காதுக்கோ மட்டும் இன்பம்
நல்குகின்ற கலையைவிடப், புலன்ஐந் துக்கும்
நல்லின்பம் தரும்கலைதா னே,சி றப்பு!

வெள்ளிநிலா மெழுகுகின்ற மேன்மா டத்தில்
வீணையைப்போல் மாதவியும், அதனைத் தொட்டுத்,
துள்ளுகின்ற அதன்நரம்பில் குளிர்ச்சங் கீதம்
தொடுக்கின்ற கோவலனும் இனிக்கும் போது,
தெள்ளுமணித் தமிழினிலே இக்க ருத்தைத்
தெரிவித்தான் பெருவணிகன் பிள்ளை. தாசி,
'மொள்ளும்தேன் நான்என்றால், உங்கள் நாக்கை
மொழிக்கலைக்குப் பயன்படுத்தல் சரியா?' —என்றாள்.

'உப்பைஇனிப் பாக்குகின்றாய். என்உடம்பின்
உலைவெப்பம் தனைக்குளிர்ச்சி ஆக்கு கின்றாய்.
கொப்புளிக்கும் காமத்தை இன்பம் ஆக்கிக்
கொடுக்கின்றாய். ரசவாதக் கலைஅறிந்த
சிப்பிமுத்தே! மானிடத்தின் போதைச் சொத்தே!
சிவப்புதட்டு மருந்தாலே, கனிந்த ரெட்டைச்
செப்புகளின் ஒத்தடத்தால்,— என்றன் நோயைத்
தீர்த்துவைக்கின் றாய்,உனக்கென் நன்றி' —என்றான்.

வியாபார மன்மதனும், புகாரில் வாழ்ந்து
விலைஇன்பம் தந்தவளும் —இவ்வா றாகப்
பாவாடைத் தோகைமயில் அகவல் போலும்,
பதில்கொடுக்கும் பைங்கிளியின் வார்த்தை போலும்
வேர்பாய்ந்த புகழ்த்தமிழில் பேசிக் கொண்டும்,
வேட்கைதனை வேர்வைஎன மாற்றிக் கொண்டும்,
தீபோர்த்த பகற்பொழுதில் மெலிந்தும், தங்கத்
தீபஇரா வேளையிலே சிலிர்த்தும் வந்தார்.

சத்துமுத்த ஒத்தடத்தை விரும்பும் பெண்தான்
சதிர்க்கணிகை —என்றாலும், நெஞ்சில் பண்புச்
சொத்துமிக வளர்ந்திருந்த காரணத்தால்
சுயநலத்தை ஓரளவு குறைத்து, ஒவ்வோர்
பத்துதினத் திலுமைந்து தினங்கள், சொந்தப்
பத்தினியின் வீட்டுக்குச் சென்று காமப்
புத்தகத்தைப் படித்துவரு மாறு கூறிப்
பொருள்வணிக னைஅனுப்பி வைத்து வந்தாள்.

மாணிக்கப் பரற்சிலம்பைக் கழற்றி விட்டு
மனையறத்தை வளர்த்துவந்த கண்ண கிப்பெண்,
கேணிக்குள் நீர்போல; அவளைத் தொட்டுக்
கிளுகிளுக்க விரைவானேன் —எனநி னைத்தோ,
ஆணிப்பொன் அகத்திருக்கக் களிம்புச் செம்பை
அணைத்துவரும் தன்செயலால் நெஞ்சுக் குள்ளே
நாணப்பட் டுக்கொண்டோ— வணிகன், அந்த
நாட்களிலே கண்ணகிபால் செல்ல வில்லை.

கண்ணகிபால் தித்திக்க— என்று காதற்
கணிகைநிய மிக்கின்ற நாட்கள் தோறும்,
தண்ணருவி சொரிகின்ற கறுப்புக் குன்றை—
தலைப்பசுமை வளர்க்கின்ற மரக்கூட் டத்தை—
கண்ணுடி நிலாத்தகட்டை— வெள்ளி மீனை—
கைஅல்ல, இயற்கைசெய்த கொலுக்கூ டத்தைக்
கண்களினுல், மற்றையநாற் பொறியால் துய்த்துக்,
கள்கண்ணி வீட்டுக்குத் திரும்பிச் செல்வான்.

நிலாப்பழமோ திங்களொன்றைக் குறிக்கும்; வெள்ளி
நிறமுல்லை நாளொன்றைக் குறிக்கும்; ஆனுல்,
பலாப்பழமோ ஓராண்டைக் குறிக்கும். காலம்
பழைதாகி விட்டதுஓர் ஆண்டு. காம
கலாநிதியாம் கலாபமயில், முத்தைக் கொண்ட
கடற்சிப்பி ஆகிவிட்டாள். பிறகு, கொஞ்சிக்
குலாவுதற்குச் சதைச்செல்வம் ஒன்றைத் தந்து
கோவலனைப் பகற்போதும் மகிழ வைத்தாள்.

பொட்டைப்போல் புதுஉறவு நிதம்தே டாமல்
பொன்தாலி போல்ஒருமை உறவு கொண்டு,
தொட்டிலிலும் கட்டிலிலு மாகப், பெண்மைத்
தொழில்புரிந்து கொண்டிருந்த அவளை, மாலை
சுட்டதுவே கிடையாது. எதனுல் என்ருல்
தொய்யிலைப்போல் அவள்தலைவன் என்றென் றைக்கும்
ஒட்டுறவு வளர்த்ததனுல், பிரிந்தால் தானே
உலவுதென்றல் புலிஆகும்! நிலாத கிக்கும்!

இறக்கையில்லா மல்பறந்து வந்த தென்றல்
இடைபுகுந்து செல்லமுடி யாமல் நிற்க—
உறுத்துகின்ற முத்தாரம் வடுப்ப டுத்த—
ஒருவருக்குள் மற்ருெருவர் புதைந்து, பொய்மை
உறக்கத்தில் ஐம்பொறிக்கு விழிப்பு தந்து,
ஒளிப்பிழம்புத் துனுக்குகளால் கிள்ளப் பட்ட
கறுப்பிரவைத் தேன்ஆக்கி, ஈர நேரக்
கலைவளர்த்துக் கொண்டிருந்த போது, ஓர்நாள்:

நீலநிற ஆகாயம் பிரச வித்த
நிலாப்பிறைபோல் தொட்டிலிலே என்கு ழந்தை
தாலாட்டைப் பின்தொடர்ந்து தூங்கு கின்ருள்.
தமிழ்த்தலைவா, சங்கீதப் புலவா, உங்கள்
தாலிப்பெண், என்தமக்கை, கண்ண கிக்குத்
தாய்ப்பதவி கிட்டிற்ரு? கிழங்குப் பெண்மைப்
பால்வேலை நடத்திவந்த அன்னம், தாய்மைப்
பால்வேலை துவங்கினளா? சொல்வீர்! என்ருள்.

காய்அன்பு, தழைஅன்பு அல்ல; — நல்ல
கனிஅன்பு கொண்டிருந்த காசுத் தாசி
வாய்க்கேள்வி யில்,உறவின் பற்றும், முற்றி
வளர்ந்தநிலாக் குளிர்மனமும் இருக்கக், கேட்ட
நாய்கன்மரு கன்திகைத்து விழித்தான். பொய்க்கு
நாக்குமடி யாததனுல் ஊமை ஆனுன்.
போயிருந்தால், சாய்ந்திருந்தால்— கண்ண கிக்குப்
பூரிப்பு சேர்த்திருந்தால் தானே— பேச!

மௌனத்தில் ஒளிந்திருக்கும் தவற்றைக் காண,
மாதவி,தன் தோழிதனை அழைத்து, 'செப்புச்
செவ்வாய்ப்பெண் ணிடம்கணவன் செல்கின் ருனு?—
தேய்கிறதா சந்தனம்? தேன் பேச்சுக் கிள்ளை
கௌவாத மாம்பழமா அவள்?ஆண் சிங்கம்
களிப்போடு நுழையாத குகையா அந்தச்
சவ்வாதுப் 'பெண்வீடு? சென்று கண்டு
சாற்றிடுவாய் என்னிடம்,என் றனுப்பி வைத்தாள்.

பிரிக்காத பொட்டலமாய், வெற்று வீட்டில்
பிழம்புவிடும் விளக்காக, உழாத மண்ணுய்,
உரிமைஇல்லாள் உரிமையில்லா ளாக உள்ள
உவர்விழிநீர்ச் சரித்திரத்தைத் தோழி வந்து
தெரிவிக்க, அகக்கணிகை கேட்டு, நீட்டும்
தீநாக்குப் பட்டபுரு ஆனுள். மானுள்
வரிவலைக்குட் பட்டதுபோல் நொந்து, வெந்த
வாசகங்க ளால்கவலை வளர்க்க லானுள்.

பாடுதமிழ்க் கவிதையைப்போல் அமைப்புக் கட்டும்
பக்குவமும் இருக்கின்ற முறையில், எங்கள்
வீடுஇருக்க வேண்டுமென்று விரும்பி னேன், நான்.
வீணைமகள் கண்ணகியும் இவரும் நானும்
கூடுதலோ, அளவில்சிறு குறைவோ இன்றிக்
குதுகலிப்போம் — எனநம்பி எண்ணத் தாலே
கூடாரம் நெய்துவந்தேன். இவரோ அஃதில்
கோடாரி போடுகின்ருர், இடியைப் போல.

ஒருஉதடு போதாது பேச. என்றும்
ஓராழி போதாது வண்டிஓட.
ஒருகோட்டு யானைக்கு அழகு ஏது?
ஒருபக்கம் பளுமிகுந்தால் படகு, ஆற்றில்
சரியாதா? கண்ணுடி ஒருபு றத்தில்
தாக்குண்டால், உடைவதிரு புறமும் தானே!
ஒருமனைவி தனிமையிலே வாடி வந்தால்,
உளமகிழ்ச்சி அவருக்கோ — எனக்கோ— ஏது?

பொதுமகிழ்ச்சி தாருங்கள்; இரண்டு தோட்கும்
பூமாலை யாய்இருங்கள், என்று என்றன்
புதையல்தனம் போன்றவரைக் கேட்டுக் கொண்டும்,
பொய்காட்டி ஏமாற்றி விட்டார் என்னை,
இதயஇசை அவர் எனக்கு, அவளுக் கோ, வல்
இடிஓசை ஆகிவிட்டார். எனக்கு நெஞ்சில்
பதிகின்ற மணிஆனுர். நெருஞ்சி யாகிப்
பத்தினிக்கு முள்மாலை ஆய்விட் டாரே!

எனக்கவர்மேல் விருப்பந்தான், வண்டி டத்தே
எழிற் பொழிற்கு இருக்காதா ஈடு பாடு?
எனக்கவர்மேல் விருப்பந்தான். ஆனால், அன்னார்
இல்லாட்குத் துயர்தரலை விரும்ப மாட்டேன்.
எனக்கவர்மேல் விருப்பந்தான். இல்ல றத்தை
இருளாக்கி விடுவதவர்க் கிழிவா யிற்றே
எனக்கவர்மேல் விருப்பந்தான். என்தோள் மன்னர்
இழிவுரைக்குட் படுவதற்கு விடலா மா,நான்?

துறவிஅல்ல நான்; இன்பத் தூக்க ஆசை
தொலையாத இளமங்கை. ஆனால், ஈர
உறவைவிட, மனைவியிடம் அவரைச் சேர்த்து
உதவிசெய்யத் துடிக்கின்றேன். அதனால், என்பால்
வெறுப்படையச் செய்துவிட்டால், என்னைவிட்டு
விலகிவிடச் செய்துவிட்டால், கற்பு மங்கை
பறிகொடுத்த செல்வத்தைப் பெறுவாள். அங்கே
படுக்கைக்கும் தித்திப்புப் பணிகி டைக்கும்.

தோல்வேண்டும், முரசுக்கு! தறிநெ ருக்கும்
துணிஅதற்குப் பயன்படுவ தில்லை. ஆவின்
பால்வேண்டும் உணவுக்கு. கள்ளிச் சீழால்
பயனென்ன? மக்களுக்கும், உயர்ந்த பண்பு
ஆல்நிழல்போல் விரிந்திருக்க வேண்டும். சொத்தை
அத்திக்காய் விவகாரம் தகுதி யல்ல!
நால்ஐந்து பேர்க்கு துயர் கொடுத்து விட்டு
நாம்மட்டும் மகிழ்வதென்ன — மக்கட் பண்பா?

மனப்பேச்சால் இவ்வாறு கேட்ட வாறு
வருந்திக்கொண் டேயிருந்தாள் சோழ வேசி.
பனித்தண்ணீர்க் கடற்கரையில் கூடி ஆடிப்
பாடுகின்ற இந்த்ரவிழா வேளை யில், தன்
நினைப்பை, வினை யாக்கிவிட முடிவு செய்து,
நீலவிழி ஓரத்தை உலர்த்திக் கொண்டாள்.
தினங்கள்ஒவ்வொன் றாய்வளர, சந்த னம்போல்
தேய்ந்துகொண்டே போயிற்று கால நீலம்.

தன்னாட்டைத் தானாண்டு எல்லை தாண்டித்
தலைகனத்த நாடுகளை அடிமை ஆக்க
நன்னெறியை அவருக்குச் சொல்லித் தந்த
நல்லதமிழ் நாட்டினிலே, வேரைப் போலத்
தண்ணீரால் கிளைப்பாதை அமைத்து, வாழ்வு
தந்துவரும் காவேரி, கடல்அ டைந்து
ஒன்றாகும் புகார்நகரக் கடலோ ரத்தில்
ஊர்வியக்கும் இந்த்ரவிழா ஆரம் பித்தார்.

காமம்ஒரு நோய் என்றால்— நீ, ம ருந்து.
காமம்ஒரு பசிஎன்றால்— நீ, வி ருந்து.
காமம்ஒரு குளிர்என்றால் நீதான் போர்வை.
காமம்ஒரு கோடைஎனில் நீ, பன் னீர்தான்!
ஈமத்தீ தொடும்வரையில் உயிர்உ டம்பை
எரித்துவரும் காமத்தீ! அதைத்த ணிக்கப்
பூமேனிப் பெண்உறவு தேவை! என்று
புகன்றபடி கோவலனும் அங்கி ருந்தான்.

அவனருகில் விலேஅழகி. குத்து கின்ற
ஆணிவைத்த கற்கண்டுக் குன்று ஏந்தித்
துவளுகின்ற கொடிமங்கை. இரண்டு தங்கத்
தூண்மீது அக்கொடியைப் படர வைப்போள்.
குவளேமலர் விழிகளினுல் பேசிக் கொண்டும்,
குறிஞ்சித்தேன் வாயாலே ஊமை முத்தச்
சுவடுபதித் துக்கொண்டும், தங்க அங்கச்
சுகம்வளர்த்த அவர்களங்கே மகிழ்ந்தி ருந்தார்.

விளேயாட்டு, விழாமகிழ்ச்சி, பல்கு செல்வம்
விளேவிக்கும் கொடை.கல்வி வாத மோதல்.
வளேயாத மலேவீரர் மற்போர். மற்றும்
வகைவகையாய்ப் புலனின்பம் கண்டு விட்டு,
சுளேபோட்ட கனிமங்கை, நரம்பு வீணே
தொட்டுஇசைத் தேன்வடிக்க ஆரம் பித்தாள்.
துளேக்கருவி, தோற்கருவி இசைக ளுக்குத்
துணேயாக வாய்இசையை வளர்த்துச் சேர்த்தாள்.

பொருள்கர்ப்பம் தரித்திருக்கும் வார்த்தை ஓசை
புறப்பட்டு வந்தது. தீ சேரும் எல்லாப்
பொருள்களேயும் கொல்லுவது போலே, கேட்கும்
பொறிவழியே விஷம்நுழைக்கும் கருத்து வைத்துத்
தரலானுள். கோவலனே வெறுப்ப தாயும்,
தடந்தோளன் வேருெருவன் எவனி டத்தோ
பெருங்காதல் கொண்டுவிட்ட தாயும், பொய்மைப்
பேச்சுதந்தாள் சங்கீத வரிக ளாலே!

பொய்ப்பொய்யை— நடந்ததென்று எண்ணிக் கொண்டு
புகைபுகுந்த நெஞ்சினனாய்க், காம ராஜன்
நெய்அகன்ற திரிபோல, அன்பு நீங்க,
நீறான காதலொடு, "வேசீ. நீசீ!
தைமாதக் கரும்புளனைக் கடித்து றிஞ்சித்
தள்ளிவிடு கின்றாய்நீ வார்த்தை யாலே.
சையோக சம்பந்தி யாக, வேறு
சரசகலை வாணர்களை நாட லானாய்!

கரிந்துவிட்ட வைரமென்று கூட அல்ல;
கரித்துண்டு என்றேதான் உன்னைச் சொல்வேன்.
சரிந்ததுநீ கட்டிவந்த சாம்பல் வீடு.
சதிகாரி நீஎன்று புரிந்து கொண்டேன்.
வருந்துகிறேன்—உனைவிட்டுப் பிரிதற் கல்ல;
வஞ்சகியே—இத்தனைநாள் பிரியா மைக்கு!''
எரிந்துவிழும் மலைக்குழம்பு போலச் சொல்லை
எடுத்தெறிந்தான். வணிகன்மகன் எழுந்து போனான்.

வீணைஅங்கே ஒய்ந்தது. நெய்ச் சோறில் லாமல்
விரித்தபடி இலைகிடந்த தங்கே. வில்லில
நாணைஒட்டித் தொடுவதற்கு அம்பு இல்லை.
நதிநீரைக் கிழிப்பதற்குப் படகு காணோம்.
தூணில்லை. கப்பற்பாய் சுருண்டு கீழே
தூங்கிக்கொண் டிருக்கிறது. சிலிர்க்க வைக்கும்
ஆணழகன் பிரிந்துவிட, கணிகை, கண்ணீர்
அருவியினைத் தலையணைக்கு ஊட்ட லானாள்.

வீட்டினிலே கிணறிருக்க, அதனை விட்டு
வீதியைப்போல் செலும்ஆற்றின் பொதுத்தண் ணீரை
வேட்டவன்போல், தலைகுனிந்து கொண்டு மீண்டு
வீடுவந்தான் வியாபாரி. மணந்த அன்னேன்
தோட்குரிய மனையாட்டி, தூக்கத் தோழி-
துணைவருக்கு வரவேற்புக் குளிர்ச்சி தந்தாள்,
வாட்டம்அங்கே இனிஏது? வேளை நேர
வரையறுப்பும் இருக்காது தென்றல் வீச.

குலம், பெருமை, உயர்வாழ்வு— இவைகளுக்குக்
குறைந்துவிடும் தகுதி, தங்கள் நிலையால் என்று
இலம்பாடு எனும்சுருக்கம் உற்ற, பண்ட
இயல்வணிகன், பொருள்பெருக்க எண்ணி, நீண்ட
நிலப்பயணம் தொடங்கிவிட்டான் மனைவி யோடு.
நிலைத்தபுகழ் மீன்பாண்டி நாடு நோக்கி
விலைநோக்கச் சிலம்பெடுத்துக் கொண்டு, அந்த
வீணைவண்டும் தேன்மலரும் போன்றோர் சென்றார்.

அருந்தலைவன் நாடுவிட்டுச் சென்ற சேதி
அக்கினித்தூள் வாக்கியமாய்க் காதில் ஏற—
வருந்துவதே தொழிலானாள் பரத்தை. செல்வ
வளம்தேடிச் சென்றாராம்! அளவி லாஎன்
திரவியம்எல் லாம் அவரின் சொத்து தானே!
சித்தம்போல் எடுத்துக்கொண் டிருக்க லாமே!
உரிமைஎண்ணம் இல்லாமல், நெல்லை விட்ட
உமியைப்போல் ஆனாரே! என்று நைந்தாள்.

ஆசைமிக உடையவளே. ஆத லாலே
அவனுக்குக் கருத்துமடல் ஒன்று தீட்டிப்
பூசாரி அந்தணனின் வாயி லாகப்
போக்கிவைத்தாள் சதைக்கணிகை. எடுத்து யாரும்
பூசாமல் உலர்ந்துவரும் சந்த னத்தைப்
போன்றிருக்கும் தன்நிலையை எழுதி வைத்தாள்.
வேசிக்குப் பாசமுண்டா? என்று சொல்லி
வியாபாரி, படிக்காமல் கிழித்தெ றிந்தான்.

சிலநாட்கள் சென்றபின்னர், மடல்மற் ருென்று
தீட்டிவிட்டாள். இம்மடலில் — சிறிதும் சொந்த
நலக்குறைவைத் தெரிவித்துக் கொள்ள வில்லை.
நல்லவரே, உங்களது பிரிவால், பெற்ருேர்
கலங்குவதை நிறுத்துவதற் காக வேனும்
கால்திருப்பி வாருங்கள் — என்று கண்ணீர்
நிலைஎழுத்து வரிசைவைத்த மடலைப் — பாண்டி
நிலத்தைஅவன் அடையுமுனர் சேரச் செய்தாள்.

கடிதத்தை வணிகனிடம் கொடுத்தோன், தாசி
கண்ணீரில் நனைந்துவரும் நிலையை, பட்டுக்
குடைவிரிக்கும் நிழல்போன்று குளிர்ந்த நெஞ்சை—
குன்றைப்போல் நிமிர்ந்துள்ள பண்பை—எல்லாம்
தடைப்பயணக் காரனிடம் சொன்ஞன். கேட்டு
நறுங்கிய பூமாலையைப்போல் ஆனுன். பின்னர்,
'உடைந்துவிட்ட மண்பானை உறவு, மீண்டும்
ஒட்டாது' எனநெஞ்சை ஆற்றிக் கொண்டான்.

'தந்தம்போல், தீங்கனிபோல், மலைவ ளர்க்கும்
சந்தனம்போல் முழுமையுமே உயர்ந்த நெஞ்சச்
சிந்தனையால் மாதவி! நான் பெருமை கொள்ளும்
தெய்வப்பெண். அவள்சொன்ன படிந டந்து
சொந்தமனை யாட்டிக்கும் பாதி இன்பத்
தொடர்கொடுத்துக் கொண்டிருந்தால், இந்தத் துன்பச்
செந்தணல்வந் தெனைத்தொடுமா? அலைகள் மோதிச்
சிதறடிக்கும் கடற்பாறை போல்ஆ வேனு?

கண்ணகியோ - குற்றமற்ற தங்கம். நித்ய
கல்யாண மாதவியும் உயர்ந்த தங்கம்.
உண்மையிலே சொல்லுகின்றேன்: நானும் கூட
உயர்ந்தவன்தான் பண்பாட்டில். பிறகு, யாரால்
கண்மழைநீர் தேங்கிற்று மூவ ருக்கும்?
கவலைமுட்கள் வளர்த்ததுயார்? மலட்டு உப்பு
மண்கருத்து தருகின்ற சமுதா யந்தான்!
வாலாட்டும் அதன்மூடச் சட்டங் கள்தாம்!

குருத்துவிடும் மனக்காதல்—பிணைந்த நெஞ்சக்
கொள்கை. அது அகஉணர்ச்சி. அதனைப் பற்றிப்
புறச்சட்டம் வரம்பமைப்ப தெதற்கு? செம்மைப்
புலத்தில்நீர் போல்நாங்கள் ஒன்றிப் போனல்
வெறுப்பானேன் சமுதாயம்? ஒழுக்கம் என்று
வேலிஒன்று அமைப்பானேன் எம்கு றுக்கே?
நிறப்படத்தை விமரிசிக்க—குருட்டு ஆளா
நீதிபதி? சரிதானு? என்ன ஞாயம்?

நிலமணி

அகத்துயரம், உடல்துன்பம் — மாற்ருருக்கு
அளிக்காத எச்செயலும் அறம்தான்! கொவ்வைச்
சிகப்பிதழால் கணிகைஎனை ஈரம் செய்தால்
தேசத்தில் யாருக்கு என்ன நஷ்டம்?
புகைச்சட்டம் எனைஒழுக்க வீணன் என்று
புறக்கணித்து விட்டதனுல் தானே நாணிச்
சுகத்தூக்க உறவுக்கு. மனைவி தன்னைத்
தொடுவதற்குச் செல்லாமல் இருந்து விட்டேன்!

சிவப்புதட்டு முத்திரைக்கும், அவள்கொடுத்த
தேன்இனிப்பு நித்திரைக்கும் என்றன் நன்றி!
உவப்புஉப்புக் குழந்தைக்கு என்தேன் முத்தம்!
உவர்நீர்த்தாய் விழிகளுக்கும் ஈர முத்தம்.
சுவறியநீர் நான், அவட்கு இனிமேல்! என்ஞல்
துயர்சுமக்கும் அவளுக்கு என்றன் கண்ணீர்!
—கவலைச்சொல் இவற்ருேடு முத்தம் வைத்தான்
கடிதத்தில். கண்ணீரால் வழிநனைத்தான்!



# இரவில் இராமலிங்கர்

தேட்டினிலே மிகுந்தசென்னை நகரில் வாழ்ந்தால்
சிறுகுறும்தன் உளம்என்று சொன்னார். மற்றோர்
பாட்டினிலோ, தருமமிகு சென்னை என்றார்.
பகவானை இறக்குமதி செய்யும் வேத
ஏட்டாலே பயன்இல்லை; அதுசூ தாக
இயற்றப்பட் டதுஎன்று சொன்னார். அந்தச்
சூட்டோடு, பொருள்சாரும் மறைஎன் றிட்டார்.
சொன்னவர்யார்! வடலூரார் இராம லிங்கர்.

சம்பந்தர், ஆழ்வார்கள் எல்லாம், பௌத்தம்
சமணமென்றால் பாம்பைப்போல் சீறி வந்தோர்!
அம்புவியில் எம்மதமும் சமமே என்னும்
அறிஞர்பெரு மான்நமது இராம லிங்கர்.
வம்பரல்ல. சிலைதிருடி விற்றோர் அல்ல.
வயிற்றுவலி மாந்திரிகர் அல்ல. நல்ல
நம்பிக்கை அவர்க்குண்டு: ஆனால் மூட
நம்பிக்கை அவர்க்கென்றும் இருந்த தில்லை.

எழுதிவைத்த நூற்காக தீதி மன்றம்
ஏற்றப்பட் டான், பிரான்சில் குஸ்தாவ் ப்ளாபர்,
கிழஅறிஞன் சாக்கிரடீஸ், ரூசோ, ஷெல்லி,
கீர்த்திபெற்ற பாஸ்டர்னுக் இவர்கள் எல்லாம்
எழுத்தாலே பாதிக்கப் பட்டோர் ஆவர்.
இவர்களைப்போல், இராமலிங்கப் பெரியார் கூட
வழக்குமன் றம் ஏறியதோர் நூலைச் செய்து
வழங்கியவர்; முழங்கியவர் முரசு போல.

முழுக்கமுழுக் கஅவிழ்த்துப் போடு கின்ற
முன்னேற்ற மோகினிகள் வாழும் மண்ணில்
முழுக்கத்தன் தேகத்தை மூடி வந்த
முட்டாக்கு மேதாவி இவர்க்குக் காலம்
பழுத்திட்ட வாலிபத்தில், தேன்கல் யாணம்
பண்ணிவைத்தார் இவருடைய அண்ணன், காமப்
பழக்கத்தை உண்டாக்கிக் கொடுக்கப், பட்டுப்
படுக்கைகளும் பசும்பாலும் இருந்த தங்கே.

மொட்டுவிரிந் ததும்வந்து மொய்க்கும் வண்டு
முதல்இரவு மாப்பிள்ளை. படுக்கை மீது
கொட்டிடுவார் புகைபோன்ற மென்மைப் பூவை;
கொழுந்துக்கை யால்மனைவி, துணைவன் பாதம்
தொட்டொற்றிக் கொண்டபடி பணிவாள்: தந்தத்
தோள்தொட்டுப் பிடித்துஅவளைத் தூக்கி, மோதும்
வெட்கத்தா லும்அவன்பால் பக்தி யாலும்
விளையும்அவள் விழித்துளியைத் துடைத்த ணைப்பர்.

முந்தானைச் சரித்திரமும், அதைத்தொ டர்ந்து
முழுப்புடைவைச் சரித்திரமும் ஆரம் பிக்கும்.
சந்தனத்தைப் பூசிடுவார் அழகி மார்பில்.
தாபத்தால் அதன்ஈரம் உலர்ந்து போகும்.
செந்தேனை அவளுதட்டில் கண்டும் உண்டும்
தேகஒற்று மைநடத்தும் போது, மீண்டும்
சந்தனத்தை, வியர்வையினுல் ஈர மான
சதுப்புநில நிலைமையிலே பார்க்கக் கூடும்.

திரவியத்தைப் போற்றுகிறோம். அதுபோல் காம
திரவியமாம் பெண்களையும் போற்று கின்றோம்.
கருவிகளைப் போற்றுகின்றோம். அதுபோல் காமக்
கருவிகளாம் பெண்களையும் போற்று கின்றோம்.
இரவுதனைப் போற்றுகின்றோம். ஈசன் தந்த
இளமைக்கு விழாஎடுக்கும் கால மாக
இருப்பதனுல் என்றிடுவார். இதுதான் ஆண்கள்
இயற்கையிலே முதல்இரவில் செய்யும் வேலை.

கொட்டைதொங்க விட்டுக்கொண் டிருந்த ஞானி
கும்மாள முதலிரவில் உறவுக் காரப்
பட்டாளம் கேலிசெய்ய, துணைவி யோடு
படுக்கையறைக் குள்அனுப்பி வைக்கப் பட்டார்.
கட்டைவிரல் நிலக்கோலம் போடத், தாலிக்
கட்டழகி ஓரத்தில் நின்றி ருந்தாள்.
ஒட்டிஒட்டி உறவாடற் குரிய நேரம்
ஓடிக்கொண் டிருந்ததங்கே. பேச்சே இல்லை.

விளக்கெடுத்து"வா-என்ருர். புதும ணப்பெண்
வெட்கத்தால் பேசாமல் இருந்தாள்: ஞாயம்!
ஒளிக்கென்ன வேலேஅங்கே? ஜோடி கூடும்
உற்சாக வேளேயிலே இருள்தான் தேவை!
ஒளிப்பானேன்? வள்ளுவனுர் கண்டு கேட்டு
உண்டுயிர்த்து உற்றறியும் வஸ்து என்று
கிளிப்பெண்ணேக் குறிப்பிடுதல் உண்மை. கண்டு
கிளுகிளுக்க"ஒளிவிளக்கும் அவசி யம்தான்!

என்ருலும், அவளிடமே ஏவித் தீப
மெடுத்துவரச் சொல்லுவது அழகா? தாமே
பொன்னுடை போர்த்திக்கொள் வார்உள் ளாரா?
போற்றிப்பா பாடிக்கொள் வோர்தாம் உண்டா?
இன்னென்று: பெண்களுக்கு அணிதல் ஒன்றே
இயல்பாகத் தெரிந்திருக்கும். அவிழ்க்கும் வேலே
என்றைக்கும் கணவர்வந்து வலிந்து செய்ய
ஏற்பட்ட வேலேயன்ரே இந்த மண்ணில்!

முறை, இந்த"முறையினிலே இருக்க, அந்த
முதலிரவில் விளக்கெடுத்து வருவா ளாபெண்?
நிறைஎன்றும், நாண்என்றும் அணேஇ ருக்க
நீர்பாய்ந்து விடுவதெங்கே பள்ளத் துக்கு!
முறைஉண்டு; கணவன்தான். அந்தப் பெண்ணின்
முழுஅழகுக் கதிகாரி தான்என் ருலும்
சிறப்பிலே, தா னுய்ச்செல்லல். தட்டும் போது
திறந்திடுவோம் எனநினேத்து அவள்இ ருந்தாள்.

விளக்கெடுத்து வா-என்றேன். அவளோ, சற்றும்
விலகாமல் நிற்கின்ருள், இடத்தை விட்டு.
விளக்கெடுத்து வா-என்றேன். அவள்அ தற்கு
வேறுபொருள் கொண்டுவிட்டாள் போலும்! பாவம்!
விளக்கெடுத்து வரச்சொன்ன தெதற்கு என்ருல்
விரிந்ததிரு வாசகத்தைப் படிப்ப தற்கு!
விளக்கெடுத்துக் கொள்ளுகிறேன் நானே— என்று
விளக்கெடுத்துக் கொண்டுவந்து வைத்துக் கொண்டார்.

விளக்கெண்ணெய் ஆராய்ச்சி எனது; பன்னீர்
விருந்துக்கு எதிர்பார்த்து அவள்நிற் கின்ருள்,
தெளியாத மனம்அதென்று நினைத்துக் கொண்டு
திருவாச கம்படிக்க ஆரம் பித்தார்.
ஒளிவிளக்கின் முகம்சூடு அதிக ரிக்க
ஒருபுறமாய் நின்றவளும் தத்த ளிக்க
வளர்ந்தஇருள் மெல்லமெல்லத் தேய்ந்து, காலை
வந்ததவர் எழுந்திருந்து வெளியே போனர்.

தனமென்று அவட்குப்பேர்! தனமென் னும்சொல்
தகுதிதரும் செல்வத்தைக் குறிக்கும். ஆனல்
தனத்துக்குத் தனமில்லை. கணவன் நல்கும்
தாளாத இன்பமெனும் செல்வம் இல்லை.
தனமென்ருல் மார்புகளைக் குறிக்கும். தோழி
தனத்துக்குத் தனமிருந்தும் பயனே இல்லை.
தனிஉறவில் தொடப்படவும், குழந்தைக் குப்பால்
தரவுமென்ற பயன்தனத்தின் தனத்துக் கில்லை!

ஊன்கலந்து உயிர்கலந்து எழுத்து வார்த்தை
உவட்டாமல் இனிக்கிறது என்று வள்ளல்
வான்உயரம் புகழ்ந்திட்ட வாத வூரர்
வாசகம்தான்! இருந்தாலும் அதைப்ப டிக்கத்
தேனிலவு ராத்திரியா ஏற்ற நேரம்?
தெரிந்தவர்கள் செய்வதுவா இந்த வேலை?
மூன்றுண்டா ஒன்றோடி ரண்டு சேர்ந்து
மூழ்காவிட் டால்?வள்ள லார்தாம் உண்டா?

மாதத்தில் மும்மாரி பொழிதல் வேண்டும்
மணஉறவும் மூன்றுமுறை கொள்ள வேண்டும்
நீதிஇது — என்றுரைத்தார் உலகத் தார்க்கு.
நெறிதானு இவர்மட்டும் துறந்தி ருத்தல்?
சாதிக்குச் சாதிஅறம் வேறு வேருய்ச்
சாத்திரிமார் சொல்வதுபோல், தனக்கு ஒன்று
மீதிஉள்ள பேர்களுக்கு வேறு ஒன்ரு?
மேன்மக்கள் இவ்வாறு செய்ய லாமா?

அமைதிஎன்ருல் எண்சுவையும் அடங்க வேண்டும்!
அகச்சுவைக்கோ ஐஞ்சுவையும் கூர்தல் வேண்டும்.
சுமப்பதற்குப் பின்னிடுவர். ஆனுல் இன்பச்
சுமைசுமக்க எல்லோரும் முந்திக் கொள்வர்.
சமஸ்கிருதச் சந்தேகம் தீர்த்து வைத்தீர்
சங்கரர்க்கு , மாணவரை விட்டே! மேதை
உமக்குஇது தெரியாதா? என்று இந்த
உலகத்தார் கேட்டுவிட்டால் என்ன சொல்வார்?

கோடையிலே இளைப்பாற்றும் நிழலே என்று
குறிக்கின்றார் கொழுநனை இக் கவிதைக் காரர்.
பாடிவைத்த படிஎங்கே நடந்தார்? இல்லப்
பாவைக்கு இவர்எங்கே நிழல்கொ டுத்தார்?
வாடியுள்ள பயிர்கண்ட போது எல்லாம்
வாடிவந்தேன் என்றுருகும் இந்த அன்பர்,
வாடவிட லாமாதன் மனைவி யாரை?
வாழ்வுமுழு தும்குமுறச் செய்ய லாமா?

தனித்தனிமுக் கனிபிழிந்த சுவையைப் பற்றித்
தமிழ்க்கவிதை தந்திட்ட இராம லிங்கர்
தனித்தனியே இருகனிகள் இருந்தும், சற்றே
தம்கரங்களால் அவற்றைத் தொடவே இல்லை.
பணித்துளிகள் கழுவுவதால் அல்ல, பட்டுப்
பாவையரின் குழலால்தான் குளிரும் பூக்கள்!
முனிப்புலவர் இதுதெரிந்தும் ஓர்உ டம்பை
முழுவதுமே பயனற்ற தாக்கி விட்டார்!

இப்படித்தான் ஓர்இரவில் நடந்து கொண்டார்
இராமலிங்கப் பரதேசி! இவரே, மற்றோர்
மைப்போர்வை இருளிரவில் செய்த தைத்,தம்
மனப்போக்கைத் தெரிவித்த விதத்தை— பார்ப்போம்:
உப்புக்கும் செப்புக்கும் அல்ல; பொன்னுக்
குறவாக உள்ளவர்கள் சென்னை என்னும்
கப்பல்நகர்ப் பக்கத்தில் ஒற்றி யூரில்
கட்டியசத் திரத்திலன்று இவர்து யின்றார்!


லமணி

தூங்கிக்கொண் டிருந்தவரின் அருகே, திண்ணச்
சோற்றுக்கில் லாததொரு திருடன் வந்து
தீங்கேதும் செய்யவில்லை— காதில் உள்ள
திருகாணிக் கடுக்கனைத்தான் கழற்றிக் கொண்டான்.
தூங்கியவர் விழித்தெழுந்து, மற்றோர் காதுத்
தோட்டினையும் கழற்றிஅவ னிடங்கொ டுத்தார்.
ஏங்குகிறாய் சோற்றுக்கு இதையும் கூட
எடுத்துக்கொள் என்றனுப்பி வைத்தார் அன்பாய்!

ஒருகன்னத் திலடித்தால், மறுகன் னத்தை
உவகையுடன் காட்டென்று ஒருவர் சொன்னார்.
ஒருகாதுக் கடுக்கனுக்குத் துணையாய் மற்ற
ஒருகாதுக் கடுக்கனையும் இவர்கொ டுத்தார்.
திருடனென்றால், பறிகொடுக்க எதுவு மற்ற
தெருப்பொறுக்கி கள்கூட அடிக்கச் செல்வர்.
பெரியாராய் இருந்ததனால், அவன்அவ் வாறு
பிழைப்பதவன் பிழையன்றென் றிவர்இருந்தார்.

அன்புமிக்க தொருசெயல்தான். திறவு கோலே
அன்பென்று சொன்னவர்தாம் அடிகள்! தூய
அன்புடையார், எறும்புகளைக் கூட, மாற்றார்
அடையட்டும் எனக்கொடுத்து விடுவர் என்பர்.
என்புகள்தாம் தொலையட்டும் மனைவி கேட்ட
இன்பத்தைக் கொடுத்தாரா வடலூர் வள்ளல்?
அன்போடு பசிதீர்த்தார் கடுக்கன் தந்து
அழகியது மனப்பசியைத் தீர்க்க வில்லை!

இன்பத்தை எதிர்பார்த்து வந்த வட்கு
இழைத்தாலி கட்டிவிட்டு, கூட்டுத் தூக்க
இன்பத்தைக் கொடுக்காமல், கொடுமை யாக
ஏமாற்றி விட்டதனுல் இவர்து ரோகி!
இன்பத்தைத் தொடாதஇவர் தியாகி! ஆனுல்
இன்பத்தைக் கொடுத்துவிட்டுத் துறவி என்ற
தன்புகழைத் துறந்திருந்தால், அன்றே பாட்டுத்
தமிழரிவர் தியாகியிலும் பெரிய தியாகி!



# நிலவுக் கொப்புளம்

தலைமீது அன்றைக்கு மகுடம் என்ற
தங்கமணிச் சுமைதவிர வேறே இல்லை.
மலைபோன்ற துயர்ச்சுமையை இன்று என்றன்
மனத்துக்குள் சுமக்கின்றேன். முத்துப் பந்தல்
கொலுக்கூட மன்னவனாய் இருந்தேன். இன்று
குடிவந்து விட்டேன்நான் சிறைக்கூ டத்தில்!
தலைநிமிர்ந்து கொடிமரம்போல் நின்றேன். இன்று
தளர்ந்துவிட்டேன். தரைநோக்கிக் குனிந்து விட்டேன்!

மஞ்சத்தில் இருக்கின்றான் மைந்தன், த்ராட்சை
மதுஅருந்தி, மங்கையரின் இதழ்அ ருந்தி!
கஞ்சிக்கு அலைகின்ற நானோ, இங்கே
கல்தரையில் கிடக்கின்றேன். இதெல்லாம் என்ன
வஞ்சனையின் சந்திப்பா—என்றால், இல்லை.
வழக்குக்குச் சரியான தீர்ப்பி தேதான்!
அஞ்சுவதால் அழுவதனால் எதிர்கா லத்தின்
அமைப்பேதும் மாறிடுமோ? ஊகூம் இல்லை!

அன்றைக்கு நீஇருந்தாய்! எதிரே பார்க்கும்
அழகான தாஜ்மகால் இல்லை! மும்தாஜ்!
அன்றைக்கு நீஇருந்தாய். உன்பக் கத்தில்
ஆணழகன் நானிருந்தேன். காற்று கூட
அன்றைக்கு நம்நடுவே இல்லை. இன்றோ,
அதிகாரச் சாவாலும் பிரிந்து விட்டோம்—
என்றைக்கும் திறவாத இரும்பு வேலி
இதனாலும் பிரிந்துவிட்டோம். என்ன செய்வேன்?

நீ,வணிகன் மனையாட்டி. உன்மேல் என்றன்
நீலவிழி ஊன்றிவிட்டேன். விழிவீ திக்குள்
ஊர்வலமாய் நீவந்தாய். நெஞ்சக் கோயில்
உள்வந்து ஆளுகின்ற தேவி ஆனாய்.
பூவுக்கு மணம்உண்டு, இரண்டாம் ஈடாய்ப்
பொன்முடியில் அணிந்தாலும்! வார்த்தை கோத்த
பாவுக்குச் சுவைஉண்டு, அந்தப் பாடல்
பழையதொரு புத்தகத்தில் இருந்த போதும்!

நீ தேனில் தோய்த்தெடுத்த பலாச்சு ளைதான்!
நீவானில் மேய்ந்துவந்த நிலாச்சு ளைதான்!
நீதேர்தான், வீதிகளைத் தொட்ட வள்தான்!
நீவிரலை விட்டுவந்த மோதி ரந்தான்!
காதோர நீள்விழியின் மொழியும், காதல்
கலையறிவும் நீமுன்பே படித்த பாடம்.
ஆதார மாய்வந்தாய். திடம்ஆ னாலும்
ஆவியாய் நீஇருந்தாய், எனக்கந் நாளில்!

சந்தமரம் தொங்கவிட்ட விழுது போலச்
சரிகின்ற உன்கூந்தல் தொடுவேன். நீலப்
பந்தலென்பேன். முகநிலவின் கூரை என்பேன்.
பனிஅருவி கருத்ததென்பேன். பருவப் பூவின்
விந்தென்பேன் தேனை.தேன் கூடென் றுன்றன்
விரிகுழலை உருவகிப்பேன். இதுதான் பெண்கள்
சொந்தத்தில் வளர்க்கின்ற தோகை என்பேன்.
தொட்டவுடன் குழல்வலையால் எனைப்பி டிப்பாய்.

இன்றைக்கு இதோதெரியும் நிலவு, அன்றும்
இருக்கத்தான் இருந்தது நீ அறிவாய். ஆனால்
அன்றைக்கு நிலவுக்குத் துணையாய் உன்றன்
அழகுமுகம் இருந்த(து);இன்றோ துணைஇல் லாமல்
பொன்னிலவு கிடக்கிறது தனியாய்! நன்றாய்ப்
பூரித்த கனியென்றேன் அதனை அன்று!
இன்றைக்கோ, மயானத்தில் கிடக்கும் மண்டை
எலும்பென்பேன். நாய்க்குடையின் வட்டம் என்பேன்!

அரசாங்கத் தில்உனக்கு மிகவும் நாட்டம்.
சரசாங்கத் தில்எனக்கு மிகவும் நாட்டம்.
தரையாளும் கலைவிரும்பும் பெண்நீ! நான்மா
தரையாளும் கலைவிரும்பி வந்தேன். நீயோ
வரிவேண்டும் என்றிடுவாய். கண்ணி லேசெல்
வரிவேண்டும் உனக்கென்பேன் நான்.என் றாலும்
சரியாமல் செங்கோலோச் சும்பொ றுப்போ
சரிபாதிப் பொதுப்பொறுப்பன் றோ நமக்குள்?

நீவிசிறிக் கொண்டிருக்கும் தோகை, ஆடும்
நீலமயில் மரணத்தின் விளைவு என்பேன்.
சாவுதந்த சரக்கெனக்கு வேண்டாம் என்பாய்.
சரமுத்து மாலைகளும் அப்ப டித்தான்,
ஓவியமே! சிப்பிகளின் உயிர்தான் என்பேன்.
உடனேநீ அவற்றினையும் களைவாய். பட்டுப்
பாவாடை, பூச்சிகளின் பிணந்தான் என்பேன்.
பாவமெனக் கேன்என்று களைவாய் ஆடை.

தனத்தின்மேல் தனமென்பேன். ஆமாம் என்றன்
தனத்தின்மேல் சந்தனம்தான் உள்ள தென்பாய்.
கனிமீது கிளிகாயம் செய்த தென்பேன்.
காயமல்ல இதுநகத்தின் சுவடு என்பாய்.
நினைத்தாலும் பொருள்விளங்கா உருண்டை என்பேன்.
நித்தமகப் பொருள்விளக்கும் உருண்டை என்பாய்.
குனிகின்ற குணமுனக்கு இருந்த போதும்
குன்றுகளேன் குனிவதில்லை என்பேன். காய்வாய்.

காய்ந்தாலும் நீகனிதான். ஈரத் தேன்நீ
கட்டழகி தானுடைகட் டாத போதும்,
சாய்ந்தாலும் தளர்ச்சிஉனக் கில்லை, சாம
சமத்துவத்தில் அடிமைநிலை வளர்க்கி றாய்நீ!
தேர்ந்தவரை விடத்தெரியார் விரும்பு கின்ற
தேர்வன்றோ உன்தேர்வு? கிண்ணப் பெண்ணே!
ஆய்ந்தாய்ந்து பார்த்தாலும் உனக்கு அப்பால்
அணுஅளவு சுகமேனும் உலகில் உண்டா?

எத்தனை நாள் உன்னோடு பழகி ஞலும்
எனக்கோநீ புத்தகந்தான்! உன்நெஞ் சுக்குள்
பத்திரமாய் நானிருக்கத் தானே ரெண்டு
பருத்தமலை அரண்மேலே வளர்க்கி ருய்நீ!
கத்தியினுல் கீருமல் பிளந்தி ருக்கும்
கனிந்தசுவை மாதுளையின் முத்தோ, வாழும்
வித்துமுத்து. மாலைமுத்தோ செத்த முத்து.
விரும்பும்உன் வாய்ச்சிரிப்போ ஜீவ முத்து!

நீமின்னல், என்ருலும் இடிஉன் னோடு
நிச்சயமாய்த் தோன்றுவதே இல்லை என்றேன்.
காமரதி நீசிரிப்பாய் இடிஇல் லாமல்
கனத்தமழை வருவதுண்டா என்று கேட்பாய்.
சாமந்தான் சிறந்ததென்பேன். ஆமாம், பேதம்
தானதண்டம் இவைநமக்கு வேண்டாம் என்பாய்.
தாமதமே கூடாது. மன்ம தத்தைத்
தவிரமதம் கூடாது உலகில் என்பாய்.

மறைத்துவைக்கும் காரணத்தால், ஆண்க ளுக்கு
மட்டுந்தான் உரியதென்ற நிலையால், வாழ்வு
முறைகூறும் வேதம்போல் உள்ள பெண்கள்
முகநிலவின் பின்னுலே கூந்தல் என்ற
கறுப்பிருட்டை வளர்ப்பானேன் என்று கேட்டால்
ககனநிலா கனகநிலா கூட, பின்னுல்
கறுப்புத்தான், அதுபோல்தான் நானும் என்பாய்.
கண்ணுடித் தாமரைக்கும் தண்டுண் டென்பாய்!

மருதநிலத் தில்சேறு இருக்க வேண்டும்.
மனத்திலது கூடாது. முன்பக் கத்தில்
உருவாகும் பின்னலுக்குப் போட்டி யாக
உருவாக்கும் பின்பக்கப் பின்ன லாலே
சரசஇயல் தவறிடுமா? ஊகூம்! இன்னும்
சத்துத்தான் அதிகரிக்கும். கைக்கொன் றுக
எருதுகளை அடக்குவதில் உள்ள கஷ்டம்
எனக்குத்தான் தெரியும். உனக்கென்ன தொல்லை?

நாலைந்து இலைவந்து விழுந்தால் ஓடி
நக்குகின்ற தெருப்பொறுக்கி தேடும் எச்சில்—
பாலென்றும், தேன்என்றும், இரண்டும் சேர்ந்த
பதமென்றும் சுவைகூறும் எச்சில் ரெண்டும்
தோலிலைநா தருகின்ற நீர்தான். ஒன்றைத்
துயரென்றும் மற்றதைஏன் இன்ப மென்றும்
வேலிகட்டி வித்யாசம் காட்ட வேண்டும்?
வித்யாசம் ஒளியாலும் இருட்டா லுந்தான்!

நீவிந்தை தெரிந்தவள்தான். மொக்கு முல்லை
நீரைவைத்தே மலர்ந்தநகை தருகி றாயே!
காவலின்றி இருகுவியல் தனம் வளர்ப்பாய்!
கடித்துவரக் கடித்துவர வளர வைப்பாய்!
பூவுக்கோ உன்கூந்தல் தூக்கு மேடை
புரிந்திருந்தும் சிரிப்பானேன் இந்தப் பூக்கள்?
காவடிபோல் பாற்குடங்கள் இரண்டேன்? இந்துக்
கடவுள்மத வழக்கமன்றோ இதெல்லாம் என்பேன்.

நீநிலவுதான்· ஆனல் உன்னை, என்னை
நீக்கிமற்ருேர் விழிதீண்ட முடிவ தில்லை.
தேன்நிலவும் பூதான்நீ! ஆனல் உன்றன்
திருமணமோ என்னேடு மட்டு மேதான்!
சீனிக்கற் கண்டேதான் நீஆ னலும்
சிறிதேனும் கரைவதில்லை குளிக்கும் போது!
சேலைகளை உனக்குள்ளே அடக்கி னலும்
சேலைக்குள் உனையேநீ அடக்கு கின்ருய்!

கைமீது கைஎன்பேன். படுக்கை மீது
கரும்புமங்கை இருக்கின்றேன் இங்கே —என்பாய்.
கைமீது கைஎன்பாய் கொங்கை மீதென்
கைவைத்த நேரத்தில் . தெற்கு நாட்டின்
தைமாதம் கல்யாண மாதம், மக்கள்
தைக்கின்ற மாதமது என்பேன். தங்க
மெய்மீது பொய்என்ருல், ஆடை என்பேன்.
மெய்மீது மெய்என்ருல் காதல் என்பாய்.

நாலுமுழ நீளந்தான் மங்கை. ஆனல்
நல்குகின்ற மகிழ்வுக்கு முடிவு உண்டா?
தோலுக்கும் எலும்புக்கும் நடுவே உள்ள
சூட்டுக்குப் பெண்தானே மாற்று! யுத்த
வேலெடுக்கும் வேந்தனுக்கும் சேலைத் தூக்க
விளையாட்டு இல்லாமல் முடிவ தில்லை.
ஓலமிடும் கடலுக்கும் உயிர்மூச் சுக்கும்
உறவுக்கும் என்றைக்கும் ஓய்வே இல்லை.

வாய்திறந்தும் பேசுவது இல்லை பூக்கள்.
வழக்குமன்றம் போவதில்லை பெண்டிர் வம்பு.
பாய்க்கனுப்பும் நோய்காதல். இந்த நோயோ
பலர்விரும்பி அனுபவிக்கும் தொட்டா ரொட்டி.
தேய்வின்றிப் பயன்படுஞ்சந் தனமே! சத்துத்
தேகத்தில் வளர்கின்ற தேன்தான் எச்சில்!
தாய்மொழியில் இத்கைய புதிய எண்ணம்
தருவதற்கு(உ)ன் அழகன்றோ கொடுக்கும் ஊக்கம்!

குத்துகின்ற மூக்கைச்,செங் குருதி வண்ணக்
கொண்டையினைத் தூக்கிநின்று கத்தும் சேவல்
நித்திரையைக் கலைத்திட்டால், அதன்க ழுத்தை
நெரிக்கத்தான் கைதுடிக்கும், ஆனால் நீயோ
அந்தாணி மண்டபத்தில் இருந்து கொண்டு
அரசியலில் நடவடிக்கை ஆரம் பிப்பாய்.
உத்திரவு போடுகின்ற அரசி யே! நான்
உனக்குள்ளே அடங்குகின்ற செங்கோல் வேந்தன்!

மூக்கிருந்தும் முகராமல் தன்னை மாற்றோர்
முகரவைப்ப தெதுவென்பாய். தேமா என்பேன்.
நாக்கில்லா வாய்எதென்பாய். பூதான் என்பேன்.
நரம்பில்லா வீணை?என்பாய். மார்பு என்பேன்!
தூக்குகின்ற உறுப்பான காம்பை தன்மேல்
சுமக்கின்ற கனிஎதென்பாய், அதுவே என்பேன்.
பூக்காத அரும்புதரும் தேன்எ தென்பாய்.
புதுமுத்த எச்சிலென்பேன். தருவாய் வாய்த்தேன்!

இவ்வாறெல் லாமினித்தோம். ஈர நீல
இரவெல்லாம் வியர்வையிலே குளித்தோம். முத்தச்
செவ்வாயை வெள்ளிநிறம் ஆக்கிக் கொண்டோம்.
தென்பாண்டி முத்துபெற்றேம் நெற்றி மேட்டில்.
சவ்வாது மாதே!மன் மதனின் தூதே!
சரித்திரத்தில் இனிஇதெல்லாம் நடக்கு மா?நான்
எவ்வாறு வாழ்ந்திடுவேன் நீஇல் லாமல்?
எரிக்கிறதே நெருப்புத்தூள் பூமி என்னை!

பொருளிருந்தால் நிழலிருக்கும். பொருள்நீ இன்றி
பூமியிலே எப்படிநான் நிழலாய் நிற்பேன்?
கருவறையின் சித்திரமே! மண்மேல் வாழ்ந்து
கண்ணீரில் குளிக்களனக் கிஷ்ட மில்லை.
வருகின்றேன் உன்னிடத்தில். சாவுக் கோட்டை
வாசல்இன்று திறக்கட்டும். விடிவில் லாத
இருட்டுக்குள் உறங்கிடுவேன். சாய்ந்து போன
எனக்கினிமேல் நோய்இல்லை துன்பப் புண்ணால்!

தோலுரித்த நுங்கைப்போல், மண்மேல் வந்த
சுடர்நிலவுக் கொப்புளம்போல், பூமிப் பெண்ணின்
மேலெழுந்த தனிமார்பைப் போலே இந்த
மின்னல்வீ டென்றைக்கும் இருக்கும். ஆனால்
நீல்விழிப் பெண்நீயும் நானும், சாவு
நித்திரையி லேயிருப்போம், பளிங்குப் பெண்ணின்
சேலையற்ற நிலையாம்இத் தாஜுள் வந்து
சேர்ந்திடுவேன் உன்பக்கம் படுப்ப தற்கு!



# புண் கின்னம்

நீலமழை பொழிகின்ற கார்கா லத்தில்
நிச்சயமாய்க் காதலர்கள் பிரிவ தில்லே.
வேலெடுக்கும் அதிவீர ராமன் வேர்வை
வேனிலிலும் காதலியைப் பிரிந்த தில்லே.
சேலென்ருல் உன்விழிகள், நீந்து தற்கென்
தேகமிங்கே வேண்டாமா என்றி ருந்தான்.
சேலேக்குள் சிலபோழ்தும் தழுவும் மன்னன்
திரள்கரத்துள் பெரும்போழ்தும் அவளி ருந்தாள்.

கொம்பிருந்தும் நீபிடிதான். கூந்தல் என்னும்
குளிர்தோகை யிருந்தும்நீ பெண்ம யில்தான்.
வம்பிருந்தும் சமாதான வல்லி தான்நீ.
மாங்கனிதான் நீநாரில் லாத நாரி.
அம்புவிழி எய்வதனல் நீ வில். நாணும்
அதனல்தான் இருக்கிறது உனக்கு. காதல்
நம்பிக்கை எவர்மீது இருந்தா லும்உன்
நம்பிக்கை அவன்மீது தான்இ ருக்கும்.

நீலமணி

தண்ணீரின் ஓட்டந்தான் ஆறு. தண்ணீர்
தலைகீழாய் விழுவதுதான் அருவி. அன்பே
எண்சாண் நீ எழுப்பியதே அழகு மேனி.
இருள் நிறத்தால் வீழ்த்துவதே கூந்தல். வட்டக்
கண் நீலக் கடல்என்றால் சரிதான்; பாயும்
காமத்தி மிங்கலங்கள் சுழல்வ தாலே.
விண்மின்னல், உறுமுகின்ற மிருக மின்னல்;
மெல்லியல் நீ பெண்மின்னல்; தழுவும் மின்னல்.

குவளையிலே மூடிவைத்துக் காக்கும் தீம்பால்
குடிக்கையிலே நிர்வாண மாய்த்தான் தீரும்.
அவிழ்ந்தால்தான் சுவடியிலே தூங்கும் பாடல்
அனைவர்க்கும் சுவைவழங்கும். எட்டுச் சாணில்
நவரசமும் ஐம்பொறிக்குச் சுவைகள் ஆறும்
நல்குவதென் றால்எதற்குச் சேலை வேலி?
புவிராசன் இவ்வாறு கேட்டான். மங்கை
பொன்னில்வைத்துப் பதிக்காத மணிபோல் வந்தாள்.

இதழ்க்குழியில் இல்லாத மகரந் தத்தூள்.
இருகரைக்குள் ஓடாத வண்டல் வெள்ளம்.
நிதியறைவிட் டெழுந்துவந்த தங்கப்பாளம்.
நீக்குகணுச் சக்கையிலாக் கரும்புச் சாறு.
மதிக்குண்டா காம்பு?இலை? தொங்கும் கொம்பு?
மதிபோல வந்தவளே, வாவா. கொஞ்சம்
மதனசுக மஞ்சரியைப் பாடு கின்றேன்.
மடிமீது வந்தமர்ந்து எழுது என்றான்.

மணிரத்ன அரசுகட்டில் வேண்டாம். சீதை
மடிபோதும் எனக்கென்றான் அயோத்தி ராமன்.
இணைசேரும் சரசகட்டில் அரசு கட்டில்
இரண்டினிலும் அதிவீர ராமன் வாழ்ந்தான்.
வணங்கிவந்தார் பிறமன்னர் அவனை. அன்னோன்
வணங்கிவந்தான் அழகியரின் பூப்பா தங்கள்.
பிணங்கொத்தும் பதவியிலே இருந்தும் பெண்டிர்
பின்னலுக்குப் பூச்சூட்டிக் கொண்டிருந்தான்.

பதங்களுக்கு நடுவிலுள்ள இன்பம், சேர்ந்து
படிகின்ற தொடைகளிடை இருக்கும் இன்பம்,
அதிரசம்போல் இனிக்கின்ற பாவை கண்டு
அதன்சுவையைத் துய்ப்பதிலே தொடர்ந்தான். ஜீவ
நதிபோல எந்நாளும் பெருகும் காம
நதிமூழ்கிக் குளித்துவந்தான். அவனிருப்பான்
விதைபோல; சூழ்ந்தவனை அணைக்கும் பெண்டிர்
விதைமூடும் கனிச்சதைபோல் இனித்திருந்தார்.

நுரைவாழ்க்கை வாழாமல், தமிழ்நூல் நல்கும்
நுட்பங்கள் துய்த்துவந்த மேதை, தெற்குத்
தரைவாழத் தான்வாழ்ந்த தோடு, வாழும்
தமிழ்வளரக் கவிமூச்சு வளர்த்து வந்தான்.
நரைமுத்துக் குடைவிளக்கிக் கருப்புக் கூந்தல்
நறுநிழலில் தங்கிவந்தான். விடவே மாட்டான்
கருவுறங்கும் கவிகண்டால் ஓலைக் குள்ளும்
கரைச்சரிகைப் பூம்பட்டுச் சேலைக் குள்ளும்.

EVELYN RUTNAM INSTITUTE
180
REFERENCE
LIBRARY
JAF

திருச்செந்தூர் கோவைஇதழ் காட்டி வந்தால்
தேவாரப் பதிகம்அதில் இடுவேன். காமத்
திருமுறைநீ விளக்கிவைத்தால் சந்தம் தோய்ந்த
திருப்புகழ்நான் பாடிடுவேன். முல்லை வாயில்
விரும்பும்பொன் வண்ணத்தந் தாதி தந்து
விளையாடற் புராணத்தை ஆரம் பிப்பேன்.
திரிகடுக பஞ்சாங்க சுகம்கொ டுப்பாய்.
சீவகசிந் தாமணியால் சிலிர்ப்பாய் என்ருன்.

எட்டஇருக் கும்போதில் இன்ஞ நாற்ப
திணைகையிலோ நீஇனிய நாற்ப தேதான்.
தொட்டிலுக்கும் கூந்தல்கார் நாற்ப தன்ருே!
துவளுகையில் பேச்சுபழ மொழிநா னூறு.
பெட்டகமே பொருள்நிறைந்த நீநி கண்டு.
பெண்சுகத்தின் இலக்கியமே நீகற் கண்டு.
கட்டிலிலே உதவும்நீ பட்டுத் திண்டு.
கனிச்சிலையே! உனக்குலகில் ஈடெங் குண்டு?

சிலம்பதிகா ரம்செய்யும் மார்பு ஏரால்
தினமுழவு செய்கின்ருய் என்ருன். பொய்கைச்
சலம்தந்த தாமரையின் மொட்டி தென்ருள்.
சரிஇந்த மொட்டுகளின் மேலி ருந்து
தொலையாமல் கடித்தபடி இரண்டு வண்டு
தூங்குவதேன் எனக்கேட்டான். வண்டை ஓச்சி
சிலைமருங்கை அணைக்கஉமை வரவேற் கத்தான்
திண்டுக்கல் வண்டென்ருள் பதும மாது.

காரிகைநீ உன்னிடைதான் நன்னூல். சொல்லும்
கருதுபொருள் எழுத்தெல்லாம் முற்றத் தந்தும்
பேரழகி உனைஇளம்பூ ரணந்தான் என்பேன்.
பிஞ்சேநீ சுகமுற்றும் தந்த போதும்.
மாரனுக்கு அலங்கார அகப்பொ ருள்நீ.
மதிவாணர் விரித்துரைப்பார் உன்னை. முத்து
வீரியமும் நீ. நச்சி னார்க்கி னிப்பாய்.
வெண்பாப்பா அட்டியில்லை உன்சொல் லுக்கு.

உயர்திணையில் நற்றிணைநீ! குறுந்தொ கைப்பல்
உனக்கிருந்தும் நெடுந்தொகையாம் குழல்வ ளர்த்தாய்.
கயல்விழியின் புருவம்ஐங் குறுநூ றன்றோ
கலித்தொகைதான் உன்ஆட்டம். அகநா னூறும்
அயலறியாத் தனியந்தப் புறநா னூறும்
அருங்கலைச்செப் பேநீதான். முல்லைப் பாட்டும்
நயமிக்க முத்தொள்ளா யிரமும் உன்பல்!
நாலடிநீ; உன்சுகத்துக் களவு உண்டா?

கூடல்வளர் சங்கஇலக் கியம்நீ. செவ்வாய்க்
கோவைதரும் குறவஞ்சி. திருவெம் பாவை.
மூடியகா வடிச்சிந்தும் நீதான். வேளூர்
மூவருலா வரும்வேளூர்த் தலபு ராணம்.
ஊடல்கா மதுரகலம் பகம்ரா மையன்
ஓடம்நீ அழகூசல். நீல கேசி.
பேடைதொட இரட்டைமணி மாலை ஆவாய்
பெருங்கதைநீ கலையறிந்த புலவ ருக்கும்.

மாலைகொடு என்றிட்டான். தன்க ழுத்து
மாலைதனைக் கழற்றிஅவ னிடம்கொ டுத்தாள்.
மாலைகொடு என்றேன்நான். கண்வீச் சாலே
மனமயக்கம் தரச்சொன்னேன் என்றான். நீண்ட
சேலைகொடு என்றிட்டான். அணிந்தி ருந்த
சேலைதனை அவிழ்த்தவனி டம்கொ டுத்தாள்.
சேலைகொடு என்றேன்நான். நீந்தும் கண்ணும்
சேலைகொடு என்றன்றோ கேட்டேன் என்றான்.

கச்சிருக்கும் பண்டத்தை வெறுப்பேன் என்றான்.
கனதனத்தை விடுவித்தாள் கன்னி. பூக்கள்
வச்சில்லாத் தேன்வேண்டும் என்றான். செவ்வாய்
வழங்குகின்ற எச்சில்தேன் ஊட்ட லானாள்.
நச்சரவென் றிதையுரைத்தல் சரியா? என்றான்.
நச்சுகின்ற அரவமிது ஆத லாலே
நச்சரவென் றிதையுரைத்தல் சரிதான் என்றாள்
நனவதையே தொழிலாகக் கொண்ட மங்கை!

வஞ்சிஇள வெண்பாவை கண்டால் அந்தி
மயிலகவல் கலிஓசை கேட்டால் தேய்ந்து
நைஞ்சிருக்கும் விருத்தமங்கே நிற்கு மா?தன்
நரம்பெல்லாம் அமுதேறக் காளை யாகி
நெஞ்சகத்தை நிமிர்த்தாதா? என்றான். அந்த
நெஞ்சமஞ்ச அணைமீது கொஞ்சி மிஞ்சி
எஞ்சாமல் சுகமனைத்தும் கொடுத்து வாங்கி,
இனிக்காதா பெண்மைஎன்றாள் மோதும் மாது.

வெற்றிடத்தை இருநூறு சேலை யாலே
வெங்காயம் மூடிவைக்கும். கோடி இன்பச்
சிற்றிடையே இங்ஙனம்நீ இருக்க லாமா?
சித்திரமா நீபுள்ளி மானா? —என்றான்.
கற்றவரே, கதிரவன்முன் தாம ரைப்பூ
கவலையின்றி மலர்ந்திருக்கும் அறிவீர். தேக
ஒற்றுமையில் வளர்த்திடுவோம் காம யுத்தம்.
ஓயாமல் பரிமாறு வோம்தேன் முத்தம்.

என்றுரைத்த அம்மானைத் தொட்டுப் பந்து
எடுத்தரசன் அம்மானை ஆட லானான்.
குன்றுநிகர் நெடுந்தோளில் மஞ்ஞை மங்கை
கூத்தாடிக் கொண்டிருந்தாள். எனது பாடல்
என்றைக்கும் மகிழ்வூட்டும். ஆனால் தேகம்
இருக்கும்வரை தான்மகிழ முடியும் நம்மால்.
இன்றைக்கோ நாளைக்கோ வருமே சாவு.
இதற்குள்ளே சுகமுழுதும் அனுப விப்போம்.

ஒளிந்துவிளை யாடுகின்ற குழந்தைத் தன்மை
ஒழிகிறது வாலிபத்தில். சிறிது கூட
ஒளிக்காமல் உறவாடு கின்றோம். வேர்வை
உறக்கத்தில் மறக்கின்றோம் நம்மை நாமே!
களிக்கின்றோம் மதுமாந்தி. பின்னல் போடும்
காமத்தைப் பொதுவாக்கி மகிழு கின்றோம்.
அளிக்கின்றோம் ஒருவரைமற் றொருவ ருக்கு.
அணைத்தபடி எரிகின்றோம் என்றான் மன்னன்.

தெற்குலக மன்னவனும் ஆறு கோணத்
தேன்கூட்டுப் பெண்மானும் கடல்க லக்கும்
கொற்கையிலே இனித்திட்டார். பின்னும் காமக்
கூட்டுறவில் ஈடுபட்டார். காமத் தாலும்
கற்றவரின் எழுத்தாலும் மகிழ்ந்து வந்த
காலத்தில். சக்கிலிப்பெண் ஒருத்தி மீது
பற்றுவைத்தான். முற்றியசெங் கனியைக் காம்பில்
பளுவாக எத்தனை நாள் விட்டு வைப்பர்?

தோல்மீது இரும்பாணி அடிப்ப துங்கள்
தொழில். தங்கத் தோல்மீது தங்க ஆணி
யால்அடித்து நகைபோடும் பெண்ணே! ஆசை
ஆணிகளை என்நெஞ்சில் அடிக்கும் பெண்ணே!
வாலடிக்கும் புலிபோல்அம் புலிவந் தால்நான்
மட்டும்அதை எவ்வாறு வெல்வேன்? வாழைக்
காலெடுத்து வா. கட்டில் கதைதொ டங்கு.
கண்மூடி இருட்டுக்குள் காண்போம் சொர்க்கம்.

நீலமயி லேஎன்றன் வாவா என்றன்.
நெஞ்சத்தை மயிலாடு துறையாய்த் தந்தான்.
ஓய்மிடும் கடற்பாண்டி நாட்டோன் மார்பில்
உறங்கிவந்த மாலைஇது வரைக்கும் வேம்பு!
மாலழகி தனைத்தொட்ட அந்நாள் தொட்டு
மன்னவனின் மணமாலை யோகரும்பு!
சேலைத்தன் கொடியிடத்தே வளர்த்தான். இன்று
சேலை—தன் கொடியிடத்தே வளரக் கண்டான்.

உதட்டுக்குப் புதுஉவமை சொல்வீர் என்று
ஒருநாள்நான் புலவர்களைக் கேட்டேன். நூறு
விதப்பொருள்கள் சொன்னார்கள். இரவில் தோய்ந்த
வெண்தயிரின் பாளந்தான் சிவந்த தென்றார்.
இதுமதுவின் திடஉருவம் என்றார். ஆனால்
இன்றுன்னை முத்தமிட்ட தால்அ றிந்தேன்
மதலைஇள மழலையின்ஓர் மாறு வேடம்.
மங்கைவாய்க் கனிக்கதவம் என்ற உண்மை.

இழ்ழென்னும் எழுத்தைப்போல் மிருது வான
இழையாடை அணிந்தவளே— என்ற ழைத்தான்.
இழ்ழென்றால் இடையினந்தான். அதனால் தானே
இடைமீது இடையினத்தை வைத்தேன் என்றாள்.
வல்லினத்தை மார்பின்மேல் வைத்தாய் என்றான்.
வடநாட்டில் மலைவளர்த்தாய் என்றான். ஒல்லி
மெல்லினத்தை இடுப்பாக்கி மூவி னத்தால்
மெய்தந்த உயிரேவா கூட என்றான்.

சத்துள்ள உணவானாய் எனக்கென் றான், மஞ்
சத்துள்ள பெண்ணவளை நோக்கி. நாமோ
ஒத்துள்ளோம். செங்கோவை இதழி னீரம்
ஒற்றியவா றிருக்கின்றோம்—என்றாள். சொல்லுக்(கு)
அத்துச்சா ரியைவேண்டாம். எனக்கு நீயோ
அதியவசியச் சாரியைதான்! என்றான். நீல
நித்திரையில் ஆழ்ந்திட்டார்! வெள்ளி ஈட்டி
நீட்டுகின்ற காலைவர விழித்தெ ழுந்தார்.

நீலமணி

முன்தானை மிருகங்கள் இரண்டைப் பட்டு
முன்தானைக் குள்வளர்க்கும் பெண்ணே உன்னை
இந்நாட்டோர் அறியமணம் புரிவேன் என்று
இரும்பைப்போல் உறுதிமொழி தந்தான் மன்னன்.
கன்னலைப்போல் இனிப்பாலே மட்டு மின்றி
கருமையினு லும்இருந்த அவளைத் தம்பி
ஒன்றுபடும் மன்றலிலே தாலி கட்ட
ஊகூம்நான் விடமாட்டேன் என்றான் அண்ணன்.

உடன்படுக்கைத் துணையாகத் தாலி கட்ட
உடன்படிக்கை அவளோடு செய்து வந்தேன்.
தடைபோட்டான். உடன்பிறந்த காரணத்தால்
தள்ளுவதா என்சொல்லை மன்னன். சட்டி
உடைபடலாம். சாமிசிலை உடைய லாமா?
உயர்மக்கள் சொல்வார்த்தை மாற லாமா?
ஒடிக்கின்றான் செங்கோலை எனது அண்ணன்
உலர்ந்ததொரு சுள்ளியைப்போல்! ஒப்ப மாட்டேன்!

அதிவீர ராமனன்றோ? ஆனை சேனை
ஆள்அம்பு சேர்த்திட்டான். கல்யாணத்தை
எதிர்த்திட்ட முன்னவனே! தடுக்கும் உன்னை
இல்லாமல் செய்கின்றேன் ஆயு தத்தால்!
நதிசெய்வோம் ரத்தத்தால், யுத்த மோதல்
நாளைக்கே துவங்கிடுவோம் — என்றான். கேட்டு
அதிர்ந்திட்டான் வரதுங்க ராமன். நெஞ்ச
அன்பாலே அமைதிக்கு வழிவ குத்தான்.

நீமன்னன். ஏற்கனவே தாலி கட்டி
நிதம்—பத்து நூறுசுகம் தருவோள் உள்ளாள்.
பூமியிலே சூரியனே, நிலவோ—எந்தப்
போதினிலும் ஒன்றுக்கே இடம்இ ருக்கும்.
நீமட்டும் இருநிலவுக் கிடம்கொ டுத்தால்
நிச்சயமாய் நாடெதிர்க்கும்! நல்ல தல்ல!
பூமெத்தை தன்னில்இடம் கொடுநீ! ஆனால்
பொன்அரியா தனத்திலிடம் கொடாதே—என்றான்.

தனங்கொடுப்பேன். தனங்கொடுப்பாள். ஆனால் சிங்கா
தனங்கொடுக்க முடியவில்லை அவட்கு. ராஜ
இனங்கொடுத்த தொல்லையிது! இல்லை என்றால்
எண்ணம்போல் அவளைமணந் திருப்பேன். சிங்கா
தனங்கொடுக்கா விட்டாலும் தரித்தி ரத்தில்
சமபங்கு தந்திருப்பேன். இன்றே காம
மனங்கொடுத்தேன். மதனசுகங் கொடுத்தேன். தாலி
மட்டுந்தான் கொடுக்கவில்லை என்று நைந்தான்.

எதற்காக வீண்கவலை அன்பே ! உங்கள்
இதழ்வேண்டும். இழைத்தாலி எதற்கு வேண்டும்?
நிதம்நூறு தரம்தழுவும் போது மார்பில்
நிச்சயமாய் உறுத்தாதா தாலி? நீங்கள்
புதுச்சேலை தருகின்றீர். இழைகள் கோடி
பொதிந்திருக்கும். தாலிஇழை கொஞ்சம் தானே!
மதுதந்தீர் மனம்தந்தீர். மலரும் தந்தீர்
மணமென்று மனைமீதேன் ஏற வேண்டும்?

முதல்மனைவி உங்களுக்கு வலக்கண். நானே
முத்தமிடும் உங்களுக்கு இடக்கண். நாங்கள்
பொதுக்கூட்ட விருந்தினர்கள். கடைக்கண் ஏவிப்
புண்ணாக்கிப் புல்லரிப்பு தருவோம். நீங்கள்
நதியென்றால் நாங்களிரு கரைகள். நீங்கள்
நனைப்பதனால் குளிர்பவர்கள். மூன்று பேராய்
எதிர்த்திடுவோம் எதிர்க்கின்ற மதனை. காதல்
இலக்கணத்தைப் புதுப்பிப்போம் என்றாள் மங்கை.

சகோதரரின் படைமோதல் தவிர்க்க மற்றோர்
சகோதரியை வரவேற்றாள் மூத்த ராணி.
தகாதென்றும் தகுமென்றும் பேசப் பெண்கள்
சாத்திரத்தில் இடமில்லை. நலமு மில்லை.
சுகானுபவக் கலைவிளக்கும் தங்காய், நீயோ
தூயமலர்த் தேன்போலக் கறுப்பு, நானே
மகாமேரு மலைபோலத் தங்க வண்ணம்.
வானவில்போல் நம்நிறங்கள் ஒன்று கட்டும்.

முடிமீது அணிவைக்கும் மன்னன். நீயோ
அடிக்கீழே ஆணிவைக்கும் தொழில்அ ணங்கு.
முடிக்கணிவோர், அடிக்கணிவோர்—இரண்டு பேரும்
முகம்சேர்த்து முத்தமிட்டால் வியப்புத் தானே!
முடியணியோ, அடியணியோ இரண்டும் நாலு
முழஉடலில் சமமதிப்பு அணிகள் தாமே!
முடிமன்னன் மடிக்கன்னி ஆனாய் என்றால்
முள்அளவும் அதில்தவறே இல்லை—என்றாள்.


முடிமன்னன் என்றேனே! இந்த மன்னன்
முடிசூட நம்அடியை விடவா க்ரீடம்!
படைமன்னன் என்றேனே! அம்பு, வில்,நாண்,
பாய்கின்ற கொம்பாணைப் படை—நாம் தானே!
குடைமன்னன் என்றேனே! நமது சேலைக்
குளிர்நிழல்தான் இவனுக்குக் குடை!ப றக்கும்
கொடிமன்னன் என்றேனே! நமது நீலக்
கூந்தல்தான் கொடிஇவனுக் கென்றாள் ராணி!

தாழம்பூக் காரிகையோ சிரித்தாள், மூத்த
தாமரையின் தேன்விளக்கம் கேட்டு. நாமோ
வேழத்தின் இருகொம்பு! ஒருகொம் பின்மேல்
விருப்போடு படருமிரு கொடிகள்! வீங்கும்
வாழைப்பூ பலஇலைகள் நிழலில் தூங்கும்.
வாடிக்கை. முக்கூடல் மதுரை வீரன்
தோழமையில் எக்களிப்போம். பல்லக்கில் தோள்
தூக்குகின்ற இருநீட்சி ஆவோம் என்றாள்.

ஆணிஎன்றாள். எதுஎன்றாள். உன்சொல் என்றாள்.
அதிவீரன் அங்குவந்தான். வெள்ளம் என்றான்.
தோணிஎன்றாள். தொடலானான். தொற்றி னார்அஞ்
சுகமேஏன் துக்கமினி என்றான். தங்க
ஏணிஎன்றார். புகைபோல மேலே சென்றார்.
எச்சில்தேன் கச்சில்தேன் படைக்க லானார்.
கேணிஎன்றார். நீர்என்றும் நாம்என் றும்வீண்
கெடுமொழிஏன்? நாம்என்பீர் இனிமேல் என்றான்!

ஆடையென்ருள் ஒருத்தி.பால் செம்பி லேபார்
ஆடைஅதில் இருக்குமென்ருள் மற்ற மங்கை.
தேடுகிறேன் கிடைக்கவில்லை சோமன் வானில்
சென்றதெந்த விதமென்று வியந்தான் மன்னன்.
தோடுடையாள் துணிஎன்ருள். மற்ரெரு ருத்தி
துணிக்காதீர், இதுசேரும் நேரம் என்ருள்.
கூடையிலே மூடாத உலகில் இன்பம்
கோடிதந்தான் கொக்கோகக் கல்வி மேதை.

காலத்தைப் பயன்படுத்தி வந்த மன்னன்
காமத்தின் கணுத்தோறும் சுவைத்தான். ஏழு
மூலத்தால் ஆனஉடல் இளைத்தான். சாவின்
முன்தானைக் குள்மூச்சை முடித்தான். மேனி
மேலெங்கும் நோய்தந்த புண்கள். வாழ்வை
மென்றஅந்தப் புண்கிண்ணந் தோறும் பெண்கள்
ஓலமிட்டு உதடுவைத்து முத்த மிட்டார்.
உதட்டமுது பட்டும்அவன் எழவே இல்லை!



# எண் சாண் சாம்பல்

ஒருயானை நீட்டுகின்ற இரண்டு கொம்பை
ஒத்திருந்தோம். தாய்வயிற்றில் நீயும் நானும்
சரிபாதித் தூக்கத்தில் இருந்தோம். மூச்சுச்
சரித்திரத்தை ஒன்ருய்த்தான் ஆரம் பித்தோம்.
அரிசியைத்தான் தின்ருேம்நாம். யாரும் தங்க
ஆகாரம் தரவில்லை உனக்கு. ஆனல்
அரியணையில் நீஏறி அமர்ந்தாய். நானே
அண்ணுந்து உனைநோக்கிக் கீழே நின்றேன்!

தும்பிக்கை மலைநடக்கும் ராஜ வீதி
தோறும்நீ உலாவந்தாய். எதிர்கா லத்தில்
நம்பிக்கை இல்லாமல் நிகழ்கா லத்தை
நான்—இறந்த காலத்துக் கனுப்பி வந்தேன்.
அம்புக்கும் வேலுக்கும் வேலை வைக்கும்
அரசாங்கத் தலைவன்நீ! சோற்றுக் காகக்
கும்பிட்டு வாழ்கின்ற நான்உன் தம்பி.
கூழிட்டால் வாழ்த்துகின்ற மெழுகுக் கம்பி.

கொடுப்பதற்குக் குவிகின்ற துன்கை மொக்கு.
கொடுங்களென்று மலர்கின்ற தென்கை. பூனைப்
படுக்கையறை என்அடுப்பு! என்வீட் டின்முன்
பச்சரிசி மாக்கோலம் போட்ட தில்லை.
அடிக்கடிநான் வயிற்றுக்கு முழுநாள் ஓய்வு
அளித்துவந்தேன்; நான்மிகவும் இரக்கக் காரன்.
வடித்துவிடும் கஞ்சி—அதுன் சாய்க்க டைக்கு
வருமானம்.எனக்கதுதான் அமுத பானம்.

தோல்தடவித் துளைதடவி நரம்பு மீட்டித்
தொடுக்கின்ற சங்கீதம் கோட்டை விட்டுக்—
கால்நடையாய் வரவில்லை—இறக்கை தூக்கிக்
ககனத்தில் வருவதுண்டு! ஏக்க எண்ணச்
சூல்அறையாம் இதயத்தில் பெருமூச் சாலே
தொடுவேன்நான் உன்கோட்டைச் சங்கீ தத்தை.
வேல்முனையும் பலாச்சுளையும் சேர்ந்தாற் போன்ற
வேதனைஅச் சந்திப்புத் தோறுந் தோன்றும்.

தேன்படுக்கப் பூ.தேனீக் காறு கோணத்
தேன்வீடு. கொம்பெடுத்துத் துள்ளும் புள்ளி
மான்படுக்க இயற்கைதரும் தழையின் மஞ்சம்.
மலர்படுக்க நீள்கூந்தல். சிங்கம் தூக்கும்
கோன்படுக்க அஞ்சடுக்கு மெத்தை. தோகைக்
குளிர்விசிறி ஆலவட்டம். உடன்பி றந்த
நான்படுக்க இரக்கமுள்ள கடவுள் இங்கே
நாலுதிக்கும் பரந்ததரை படைத்துள் ளானே.

பட்டுடுப்பாய். அதுஉன்னை உறுத்தும் என்றுன்
பத்தினிமார் கண்ணீர்ச்சங் கிலிவ ளர்ப்பார்.
எட்டடுக்கு மாளிகையில் நீநடந் தால்
ஏற்படுமே கொப்புளங்கள் காலில் என்று
பட்டுச்சே லையவிழ்த்துன் பாதை நீளப்
பரப்பிடுவர்; மிகக்குழைவு அவர்தம் நெஞ்சு.
எட்டில்லை, நாலுமுழம் எனக்கு. பொத்தல்
எண்ணூறு. முழுத்துறவி என்ருே வேனே?

வெண்பட்டுக் குடைநிழலில் நீயும், ஓலை
வேயாத மண்குடிலில் நானும், காலம்
உண்டுவந்த நாட்களினுல் வளர்ந்தோம். ஓலை
உறக்கத்தி லேயிருந்த தமிழை நாளும்
கொண்டதனுல் கவிநெஞ்சம் பெற்றேன். பாட்டுக்
குடியிருப்பாய் ஆயிற்றென் நாக்கு. நித்தம்
புண்பட்ட நெஞ்சத்தில் பெருமூச் சோடு
புறப்பட்டு வந்தது(உ)யிர் தெறிக்கும் பாடல்!

இமயத்தைக் கிள்ளிவந்த சேர னுக்கு
இளையவனும் கவியிளங்கோ போலக் ரீடச்
சுமைதாங்கி உன்தம்பி எதுகை மோனைச்
சொல்மாலை தொடுத்துவந்தேன். என்ருலும்நீ
அமைத்திருக்கும் மதில்அகழி தாண்டி உன்னை
அடைந்ததில்லை தமிழ்ஓசை. அவைக்கூ டத்தில்
நமைச்சலுள்ள கவிஞருக்கும் திருடு கின்ற
நரிகளுக்கும் இடம்கொடுத்தாய். எனக்கா உண்டு?

வயிற்றுக்குள் பசிநெருப்பும், நீண்ட கையில்
வைத்திருந்த கொப்பரையின் ஓடு மாகத்
தயங்கியவா ரொருவீட்டின் முன்னே நின்று
தமிழ்ப்பாடல் வடித்திட்டேன்:

செந்தணலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றுரோ தடவினர் -பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவி என் மேல்!

கேட்டுவிட்டு

மயிலழகி வெளிவந்தாள். அவளோ நித்தம்
மன்னனுன்முன் மயில்நடனம் செய்யும் தாசி.
வெயில்வேளைப் பிச்சைக்குச் சென்ற என்னை
விருந்தினன்போல் வரவேற்ருள் இருகை நீட்டி!

தலைவாழை இலைபோட்டு அன்னம், அன்னம்
தந்திட்டாள். என்முன்னர் முகமும் நெஞ்சும்
நிலவிரவு அல்லிப்பூப் போல்மலர்ந்தாள்.
நீங்கள்தாம் உயிர்எழுத்துக் கவிஞர் என்ருள்.
இலைபாக்கு எடுத்துவந்து தந்தாள். உங்கள்
இயற்றமிழில் நான்மயங்கிப் போனேன் என்ருள்.
மலைவாழைக் கனிபோன்ற சிலபாட் டுக்கள்
மங்கைக்கு வழங்கிவிட்டு வழிநடந்தேன்.

நாணுகின்ற பெண்கன்னம் போல வானம்
நலங்குலைக்கும் மாலையிலே, அழகி, தங்கத்
தூணெடுத்த அரண்மனையில், மன்னன் உன்முன்
துளைபோடும் சங்கீதக் கவிதை தந்தாள்:

அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனமழைக் காலம்

நாணேற்றும் அம்பைப்போல் ஒவ்வோர் சொல்லும்
நறுக்கென்று உயிருக்குள் பாய்ந்த தாலே
காணத்தான் வேண்டுமந்தக் கவிஞனை; நீ
கட்டாயம் கூட்டிவர வேண்டும்- என்றாய்.

கேடுகெட்ட அன்றையநாள் பிறந்த தேனோ?
கீழ்வாசல் திறந்ததெதற்குப் பரிதி வந்தான்?
பாடுகின்ற சிலம்படியால் நடந்து நாட்யம்
பயின்றபடி என்குடிலுக் கழகி வந்தாள்.
பாடுபடும் என்வாயில் முன்னால் முத்துப்
பல்லக்கில் எவர்வந்தார் என்று பார்த்தேன்.
ஆடுமயில்! அரசாங்க அழைப்பைத் தந்தாள்.
ஆணியையென் தேன்அழைத்த தென்று சென்றேன்.

நீலமணி

---

ஆள்மீது ஆள்ஏறும் பல்லக் கில்நான்
அதுவரையில் சென்றதில்லை. செத்தால் மற்றோர்
தோள்மீது உடல்போகும் கடைசி யான
சுடுகாட்டு யாத்திரையைத் தவிர மற்ற
நாளிலிது ஆச்சரியம் என்றேன். பெண்ணே,
நாவலரே இதுஆள்வோர் தினப்ப ழக்கம்;
தாள்தரையைத் தொடவிட்டால் ஆட்க ளுக்குச்
சாட்டையினுல் கொப்புளங்கள் உண்டா மென்ருள்.

முன்நின்றேன். நீபார்த்தாய். பார்த்த உன்றன்
முகத்தினிலே ஆச்சரியம். நெடுநாள் முன்னர்
உன்அரசைக் கைப்பற்றி விடுவே னென்று
ஓடுதந்தாய். ஓடவிட்டாய் நாட்டை விட்டு.
அன்றைப்போல் இன்றைக்கும் நான் தனித்து
ஆதரிக்க ஆளின்றித் தான்இ ருந்தேன்.
இன்றைக்கு நீயாக அழைத்து விட்டு
எதற்காகக் கண்வட்டம் அகற்ற வேண்டும்?

தேன்கவிதை தருபவனே? என்ருய்! இல்லை,
செங்காய்தான் என்பாடல்—என்றேன். மக்கள்
ஊன்உருக்கும் உன்பாடல் என்ருர்—என்ருய்.
ஊன்திரளின் பலகீனம் அதெல்லாம் — என்றேன்.
நான்கேட்க இப்போதே பாடு நூறு
நறுங்கவிதை — என்றிட்டாய். பாட லானேன்.
மான்மங்கை பக்கத்தில் இருந்து வீணை
வாத்தியத்தில் காந்தஇசை இழைக்க லானுள்.

தேமாவும், பலாப்பழமும், தொடையைக் காட்டும்
செவ்வாழைக் கனியும்போல் கவிதை தந்தேன்.
பூமாதின் தனித்துணைவன் உன்னைப் போற்றிப்
புகழ் வார்த்தை கோத்துவைத்த பாடல் சொன்னேன்.
நீமாந்தி மகிழ்ந்திட்டாய். திடீரென் றேனே
நீமயங்கி விழுந்துவிட்டாய். ஏவ லாளர்
கோமானைக் கவனிக்க ஓடி வந்தார்.
குனிந்தபடி குடிசைக்கு நான்ந டந்தேன்!


விழுந்தவன்நீ விழுந்தவன்தான், எழவே இல்லை.
வீற்றிருந்தேன் அரியணையில், ஆனல் ஊசிக்
கழுத்தளவு பயனுண்டா? ரத்த யுத்தக்
களவேலை பிணங்கொத்திக் கழுகு வேலை.
மெழுகைப்போல் என்பெயரும் சரித்தி ரத்தில்
விரைவினிலே உருகிவிடும். தம்பி போன்ற
எழுத்தாற்றல் எனக்கில்லை. என்கு திர்க்குள்
இருப்பதெல்லாம் பதர்தானே — எனநொந் தாயாம்.

கோட்டையிலே இருந்தவனின் பெயரை நால்வர்
கூடஅறி யார்நாளை! பிச்சைக் கார
ஓட்டாண்டி இவனைமட்டும் நாடே போற்றும்.
உன்நெஞ்சில் இவ்வாறு தீவ ளர்த்தாய்.
பாட்டுக்கு மன்னவனுய் விட்டான். என்றன்
பட்டாளத் தால்என்ன மகிழ்ச்சி? என்ருய்.
வேட்டுக்கும் ஈட்டிக்கும் கசாப்பு வேலை
வைப்பதன்றி, விருந்துவைப்ப துண்டா என்ருய்.

அரசனென்றால் ஊர்மதிக்கும். அஞ்சும். அன்றி
அன்போடு விரும்புவது உண்டா? பாட்டு
வரியானை யோநாடு அன்பு காட்டி
மகிழ்ச்சியுடன் வரவேற்கும். மன்னன் என்னும்
வரிவாங்கும் அதிகாரி. கவிஞன் இன்ப
வரிவழங்கும் கொடைவள்ளல் அன்றோ என்று
நெருப்பானாய் அழுக்காற்றால். சுரம்மி குந்து
நீரானாய் தமிழ்க்குளிர்ச்சி பெருமை யாலே.

வான்மதியாய் ஆயிற்றுன் வதனம். வாரி
வழங்கிவந்த கை, மேகம் ஆயிற் றையா.
நான்குதிசை ஆயிற்றுன் புகழ்!ப கைவர்
நடுக்கங்க ளாயிற்றுன் வெற்றி! ஏட்டில்
தேன்கவிதை தருபவர்க்கு வாரித் தந்த
செல்வமவர் பசியாயிற் றின்று என்று
நான்மூச்சு நெஞ்சுக்குள் நினைத்தேன். நீயோ
நாலுமுழச் சாம்பலிலே படுத்துவிட் டாய்.

அரியணையைக் காப்பாற்றிக் கொள்ள என்னை
அடித்தடித்து விரட்டினை; நீ சாகா மல்அவ்
வரியணையால் காப்பாற்ற முடிந்த தா? நீ
மரணத்தால் பிணமான பின்னர் அந்த
அரியணையி லாபடுக்க வைத்தார் உன்னை
அடிமண்ணில்தான் படுக்க வைத்தார். அம்மண்
தரைதானே நெடுநாளாய் என்ப டுக்கை.
சாவாலே நாமிருவர் சமமாய் விட்டோம்!



# தண்ணீரே தாயே!

மண்மீது பிறந்தவளே! தமிழ கத்து
மடிமீது தவழ்ந்தவளே! வளர்க்கும் வண்டல்
கொண்டதனுல் பக்குவமுற் றவளே! மேற்கு
கொடுத்தனுப்பும் சீதனமே! உன்னைப் போலப்
பெண்நானும்! என்வார்த்தை கேள்!என் கண்கள்
பெய்கின்ற உவர்மழையை நிறுத்து! ஓட்டத்
தண்ணீரே! தாயே!ஊர் வாழ வைக்கும்
தயாபரிநீ எனைமட்டும் அழிக்க லாமா?

சேரன்மகன் அத்தி,அவன் எனக்கு அத்தான்.
சேர்ந்திருவர் நதியாட வந்தோம். நாங்கள்
மாரளவு ஆழத்தில் குடைந்து நீந்தி
மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டி ருந்தோம்.
ஈரமலர்ப் படுக்கையிலும், வியர்வை மீதும்
இரட்டையராய் நீந்தியது உண்டு நாங்கள்.
ஆருயிரைப் பிரிவதற்கு என்றே, இன்று
ஆற்றுத்தண் ணீர்மீது நீந்த வந்தோம்!

என்னிடத்தில் கூடத்தான் கொப்பூழ் என்று
இருக்கிறது சுழல்ஒன்று. அதனுல் ஏதும்
இன்றுவரை ஆபத்து உண்டா? இல்லை!
இவரதற்கு முத்தங்கள் இடுவார் நாளும்.
உன்னிடத்தில் இருக்கின்ற சுழலால் என்ன
உபத்திரவம் பார்த்தாயா? என்து ணைவர்
தன்னிடத்தில் அகப்பட்டால் கடித்தி டாமல்
சாப்பிடஅச் சுழல்,முயற்சி செய்ய லாமா?

தாய்மடியை விடக்,குழந்தை பாது காப்பாய்த்
தங்கஒரு இடமுண்டா? நீர்க்கா வேரித்
தாய்மடியில் புகலடைந்த எங்க ளுக்குத்
தரலாமா இத்தகைய கொடுமை? பெண்நான்
சாய்கின்ற தோட்கைளநீ பிரிக்க லாமா?
தழுவுகின்ற மார்பகத்தைப் பறிக்க லாமா?
வாய்இலையா? காவிரியே பதில்சொல். என்றன்
மன்னவரை விழுங்கமட்டும் வாய்கொண் டாயோ?

செந்தேனில் குளிக்கின்ற பலாச்சு ளைபோல்
சேர்ந்திருவர் நீராடும் போது, அத்தான்
பந்தாடிக் கொண்டிருந்தார். நீரில் பூத்த
பருவமலர் கொய்துகொண்டு இருந்திட் டேன்நான்.
எந்தவிதம் இழுத்தாயோ அவரை! மின்னல்
இழைபோல வெள்ளத்தில் கொண்டு போனுய்!
சொந்தமென்று நான்நினைத்தேன்! அறுந்து சிந்தும்
துளைமுத்து மாலையைப்போல் போய்விட் டாரே!


இனிப்பதிகம் உட்கொண்டால் வயிற்று நோவு
ஏற்படுதல் நிச்சயந்தான்! அணுக்கள் தோறும்
இனிக்கின்ற எட்டுச்சாண் கனிஎன் அன்பர்;
இவரைநீ விழுங்குவது உனக்குக் கேடே!
பனிக்கடற்குத் தருவாயோ எனது வாழ்வின்
பாதிதனை? அதன்உவர்ப்பு, முன்பி றந்த
இனிப்பமுதால் தீரவில்லை யென்றால்— இன்று
என்துணைவ ரால்தீர்ந்து விடுமா? ஊகூம்!

அன்புடையார் தம்முடைய எலும்பைக் கூட
அளித்திடுவர் பிறருக்கு. நீயும் கூட
அன்னதொரு பண்புள்ள தமிழ மங்கை!
அலைஓட்டம் நின்றாலும், ஊற்றால் தண்ணீர்
என்றைக்கும் தருகின்றாய்! வாழ வைக்கும்
இயல்புனது பிறந்தகத்துப் பண்புச் சொத்து!
தென்னகத்து ஜோடிதனைப் பிரித்து, என்னைத்
தேய்க்கின்ற எண்ணம்ஏன் வந்த தம்மா?

கனி,கொடிக்குப் பாரமல்ல. தூங்கு கின்ற
கரு, மாதர்க் குப்,பாரம் அல்ல! ஆனால்
குனியவைக்கும் துயர்—பெரிய பாரம். தூக்கக்
கூடாத பாரம்அதை என்மேல் ஏற்ற
நினைப்பாயா? அத்தகைய கொடிய எண்ணம்
நிச்சயமாய் தமிழச்சிக் கேற்ப டாதே!
தனிமை-என் உயிருக்கு மரணம்! வேர்வைச்
சந்திப்பு எங்களுக்குத் தினமும் தேவை!

விரல்வைக்கும் பொட்டுக்கும் அவிழ்த்துக் காட்டும்
விரிமலர்கள் சூடுதற்கும் முடிவு கட்ட—
பிரிவினையை நிலைப்படுத்த நினைத்திட் டாயா?
பெண்தானே நான்உனக்கு? என்னை இந்தப்
பரிதாப நிலைமையிலே வைக்க லாமா?
பாசத்தை வளர்க்காமல், பசிவ ளர்த்து,
இரைதேடும் புலியானுய்! எங்கள் வாழ்வை
இருட்டாக்கும் முடிவானுய்! செய்ய லாமா?

பிரிந்தவரைக் கொண்டுவந்து சேர்க்கும் கப்பல்
பிரயாணக் கடல்தண்ணீர் உறவே! அன்பர்
பிரிவதற்குக் காரணமாய் இருப்ப தாநீ?
பேரறிஞர் தமிழ்நூல்கள் முன்பே தின்று
இருக்கின்ருய்! எம்காம இலக்கி யத்தை
இன்றைக்கு விழுங்கிவிட முயல லாமா?
சரித்திரத்தில் கெட்டபெயர் உனக்கெ தற்கு?
தந்துவிடு என்வாழ்வை! என்அத் தானே!



# அங்கவையே அக்கா!

அன்றிரவு முழுநிலவில் நீயும் நானும்
அப்பாவு மாயிருந்தோம். முல்லைக் குத்தேர்
நின்றது. நம் மைச்சுற்றிப் பறம்பு நாடும்
நீட்டியகை இரவலரும் நின்றிருந்தார்.
இன்றிரவு முழுநிலவில் நீயும் நானும்
இனித்துள்ளோம் துள்ளும்தெய் வீக ஞேடு!
மென்றுவந்த, தின்றுவந்த தனிமை நோயை
வென்றுவந்த தின்றுவந்த துணைவர் கூட்டு!

திருக்கோவில் ஊர்என்று நீயும், வந்து
திருக்கோவில் ஊர்என்று நானும்—சொன்ஞல்
திருக்கோவி லூராரோ நமைமணந்த
திருக்கோவி லூரார்? நாம் சாட்சி வைத்துச்
சருக்கரைச்சண் டைபோடு வோம். உருண்டைச்
சந்திரனை ஒருபக்கம் கடிக்கும் பாம்பு;
விருப்பத்தால் நாமிருவர் இரண்டு பக்கம்
விழுங்கவன்றே தித்திப்பு அப்பம் பெற்ருேம்!

அன்ருெருநாள் நனேந்துவந்த ஔவை யார்க்கு
அளித்தோமே எங்களது புடைவை! இன்று
அன்ருடம் துணேவருக்கு எங்கள் சேலே
அளிக்கின்ருேம்! நெசவுக்கு ஊடும் பாவும்
பின்னலிடத் தேவை. நம் கூந்த லுக்கோ
பின்னலிட மூன்றுபுரி தேவை அன்ருே?
கன்னியர் நாம் அவரோடு அப்படித்தான்
கரும்புக்கட் டாயிருந்து தினம்இ னித்தோம்.

அங்கவையே! அக்காவே! நீயும் நானும்
அடுத்தடுத்துப் பிறந்தவர்கள். இருவ ருக்கும்
மங்கைஒருத் தியேஅன்னே. ஒருவர் தந்தை!
மணவாள ரும்ஒருவர் ஆனுர்! தப்பா?
பொங்கிவந்த தாய்ப்பாலேக் குடித்தாய். அந்தப்
பொன்முலேயின் எச்சிலேத்தான் நான்கு டித்தேன்!
இங்கேயும் பொதுஎச்சில் உறவு கொள்வோம்!
இல்லறத்தை இனிப்பிருக்கும் அறமாய்ச் செய்வோம்.

குமரனுக்குத் தெய்வானே வள்ளி என்று
கூடுகின்ற இருமனேவி. இருவ ருக்கும்
சமதர்மம் அங்கில்லே. ஒருத்தி மூத்த
சகசரச சுகஉரிமை பெற்ற தாலே!
இமைபோல இதழ்போல சமத்து வத்தில்
என்றைக்கும் இருந்திடுவோம். நமக்குத் தாலிச்
சுமைசேர்ந்த நேரம்ஒரே நேரம்! ஈரச்
சுகம்சேர்ந்த நேரமுமொன் ருன தாலே!

நிதம்,பத்து நூறுசுகம் தலைவருக்கு
நிச்சயம்நாம் தந்திடுவோம். அந்தச் செங்கோல்
அதிகாரிக் கதிரசமா யிருப்போம். காம
அமர்க்களத்தில் எதிர்நிற்போம். உடன்பட டுக்கை,
சதிச்செயல்கள், படைமோதல் எல்லாம் காண்போம்.
தழுவுகின்ற துணைவருக்கு ஈடில் லாத
புதியசுவைத் தேன்கூடு தருவோம். மோக
பூமியின்நான் கெல்லைகளை விரிவு செய்வோம்!

ஆதரிஆ தரியென்பார். திடீரென் றேனோ
ஆ,தரியா தே-என்பார். இங்கே பார்த்து
மாதுளையே மாதுளையே! முத்து றங்கும்
மாதுளையே என்றழைப்பார்! நிலாநே ரத்தை
காதலர்கள் தனித்துநிலா நேரம் என்பார்.
கடித்திடுவார். கடிதடத்தை ஒட்டுக் கட்டுக்
காதல்கலைச் சுவடியென்பார். புதுமை யான
கனிகளையும் தேன்களையும் படைப்போ மென்பார்.

ஆருக்கும் தெரியாமல் மகிழ்வ தற்கு
ஐந்துவழி கண்டோமே! சுற்றி யுள்ள
ஊருக்கு நடுவிலுள்ள கோவில் போல
ஒருவர்நம் பொதுத்தலைவர். நீயும் நானும்
வேரைப்போல் ரகசியமாய் மகிழ்ந்து பின்னர்
வெளிப்படுத்து வோம் பிள்ளைக் கனியை!
ஈரச்சந் தனமார்புத் தலைவ ருக்கு
இரட்டைமணி மாலைநாம் அலவோ, அக்கா!



# மேகலை

முன்பக்க ஆடையைப்போல் நிமிடத் துக்கு
முன்னூறு தரம்சரிந்து சரிந்த வாறே
என்றைக்கும் இருக்கின்ற அலையும், வீணர்
எழுப்புகின்ற பேச்சோசை போல என்றும்
குன்றாத பேரொலியும் நிலவும் சோழக்
கொடிநகராம் காவிரிப்பூம் பட்டி னத்தில்
மன்றத்தில் தமிழ்வளர்த்தார். மதிவ ளர்க்க
வானையும்தம் மனத்தினையும் மாந்தர் தந்தார்.

நெல்நன்செய் வயல்களிலும் வள்ளல் மக்கள்
நெஞ்சினிலும் அவ்வூரில் இருந்த(து) ஈரம்.
கொல்யானைத் தந்தத்தும், காத லித்துக்
கூடுபவர் விழியிடத்தும் உண்டு செம்மை.
அல்லிப்பெண் டிர்பாதச் சிலம்பி டத்தும்
அவைப்புலவ ரிடத்துமுண்டு தேன்சங் கீதம்.
இல்லைபகை. அதனாலே முரசு மூன்றில்
இருமுரசே முழங்கியது அந்த ஊரில்.

புகார்நகரின் மாளிகைகள் எல்லாம் வானில்
புகாமலில்லை. அத்தகைய ஒருமா டத்தில்
அகாரணமாய்ச் சங்கிலியைப் பிடித்தி ழுத்தால்
அபராதம் ஐம்பதென்றோர் கன்னல் கன்னி
சுகானுபவத் துணைவனிடம் சொன்னாள். சேலை
தொட்டுக்கொண் டிருந்தவனும் எட்டி, 'காம
சிகாமணியே இழுக்கத்தா னேஇக் கூந்தல்—
சிற்றிடைமே கலை—எல்லாம் உள்ள தென்றான்.

ஒற்றுமையும், கூட்டுறவும், தங்க அங்க
உலகத்தின் சகவாழ்வும் காணும் காதல்
அற்புதந்தான். அதிசயந்தான்— என்றாள் மங்கை.
அப்புறமோ இருவருமே பேச வில்லை.
விற்புருவம் விழியம்பு என்ப தெல்லாம்
விலக்கிவைக்க வேண்டுமினி யுவமை சொல்லச்
சொற்கள்எலாம் புதிதாகக் காண வேண்டும்.
சுவைவேண்டும் அதில்என்றான். ஆமாம் என்றாள்.

இதழோர அதிரசமும், எதிர்ப்பில் லாத
இருவரது போரிலதி சயமும், பன்னீர்
மதகுதிறக் கும்வேர்வை விருந்தும், சப்ர
மஞ்சத்துச் சத்துள்ள கதையில் வைக்கும்
பொதுக்கூட்ட ஜோடிகளின் மையல் செய்கை
புரிந்தாலும் புரியாத பார்வைச் செய்யுள்
அதைப்பயின்று பேசிக்கொண் டிருந்த போது
அழகுத்தேர் வீதியிலே வருதல் கண்டார்.

நீலமணி

எட்டிகுமரன்எட்டிப் பார்த்தான். நாட்டு
இளவரசன் வந்துகொண்டிருத்தல் கண்டான்.
பட்டத்துக் குரியவனே குமரனுக்குப்
பாசமுள்ள உயிர்த்தோழன். 'நண்பா எங்கே
வட்டக்கால் தேர்ஓட்டம்?' என்று கேட்டான்.
மகுடபதி மகன், 'அவளைச் சந்திக் கத்தான்!
சட்டத்துக் குள்இருக்கும் ஓவி யத்தைத்
தரிசிக்க இயன்றிடுமோ?' என்று சொன்னன்.

இளவரசன் உதயகுமரனுக்கும் ஆடா
எழிலரசி மாதவியின் மகட்கு முள்ள
உளக்காதல் எட்டிக்குத் தெரியும். 'தோழா
உன்அழகி இவ்வீதி வழியே சென்றுள்
உளிநகத்தால் பூக்கொய்யத் தோட்டத் துக்கு.
உடனடியாய் நீசென்ருல் அவளைப் பார்ப்ப
தெளிதென்றுன். தங்கமுடி மன்னன் மைந்தன்
எய்ததொரு அம்பைப்போல் தேரில் சென்றுன்.

பூக்களுக்கு நடுவிலவள் ஒருபூ. பன்னீர்ப்
பொய்கைகட்கு நடுவிலவள் மற்றோர் பொய்கை.
தூக்குகனிக் கொடிகளிடை கொடிமற் றென்று.
சுவைச்செந்தேன் கூட்டிடையே அவளோர் கூடு.
வீக்கத்தால் வேதனைஇல் லாத மங்கை.
விரிதோகை இருந்தாலும் ஆடா மஞ்ஞை.
நாட்கூட்டம் அவள்மதிப்பைச் சேர்த்தி ருந்தும்
நாட்களுக்கு அவள்மதிப்பு தரவே இல்லை!

தோட்டத்தில் பூக்கொய்து கொண்டிருந்தாள்
தோகைமணி மேகலை! தன் மனக்களத்தில்
வேட்கைகளை நினைவுகளால் அளந்து கொண்டே
விரல்வேலை செய்திருந்தாள். சோழச் செல்வன்
ஓட்டிவந்த தேர்நிறுத்தி வாசச் சோலை
உட்பக்கம் வந்திட்டான். பருவப் பூவே!
காட்டுப்பூ கிள்ளுகிருய் தினம்நீ நூறு.
காதலுடன் உனைக்கிள்ள வந்தேன் என்ருன்.

கிள்ளுதற்கும் அள்ளுதற்கும், விசிறித் தோகைக்
கேகயம்போல் இரவினிலே ஆடுதற் கும்
எள்ளளவும் நான்கொடுத்து வைக்க வில்லை.
என்தாயோ எனைத்துறவி ஆக்கி விட்டாள்.
கள்ளிக்கு முள்வேண்டும். தாயோ இந்தக்
கனிக்குள்முள் வைக்கின்ருள். என்ன செய்வேன்!
உள்ளத்தில் இருப்பவரே! இன்று கூட
உங்களைத்தான் நினைத்திருந்தேன். அழுதிருந்தேன்.

புத்தனுக்குச் சூட்டமலர் தொடுத்திருந்த
போழ்தினிலே, நம்காதல் நறுக்கப் பட்டுத்
தத்தளிக்கும் நிலைநினைத்துக் கண்ணீர் மாலை
சாற்றிக்கொண் டேயிருந்தேன். கவலை முத்து,
கொத்துமலர் கனைநனைத்தல் அன்னை பார்த்தாள்.
கூடாதிம் மலர்மாலை. கண்ணீர் பட்டு
சுத்தமற்றுப் போனது, நீ வேறு மாலை
தொடுப்பதற்குப் பூக்கொய்து வா,போ— என்ருள்.

அமைதியுடன் செய்யாமல், கடவு ளுக்கு
அழுதுகொண்டா செய்வார்கள்? இந்தப் பெண்ஓர்
சுமைஎனக்கு! நெஞ்சுக்குள் அழுக்கெண் ணங்கள்
சுமக்கின்ற ஊன்பிறவி. எனக்கி வள்வந்(து)
அமைந்தாளே மகளாக. பழத்துக் குள்ளே
அசையுந்தேள் இருப்பதுபோல்! என்றென் அன்னை
இமைவிட்டு விழிகிளம்பும் சினத்தோ டென்னை
ஏவியதால் இங்குவந்தேன்—என்றாள் மங்கை.

நீஅழகி. நீமாலை தொடுப்ப தென்றால்
நிச்சயமாய் அதுதுணைவன் தோளுக் குத்தான்
போயிருக்க வேண்டுமன்றிச் செத்துப் போன
புத்தனது பாறுங்கல் சிலைக்கெ தற்கு?
ஆயுதத்தின் மேல்எதற்குச் செந்தேன் பூச்சு?
அமிர்தத்தால் முகங்கழுவ லாமா? ஆயுள்
நோயாளி ஆகாதே! முடக்கு வாதம்
நொறுங்கட்டும். நீவாவா என்றான் செல்வன்.

குளிர்கொள்ளி நிலவெறியும் வேல்க ளாலே
கோடிப்புண் உடல்எங்கும். வாரி வாரி
அளிப்பதற்குத் தான்செல்வம். புதைத்து வைத்த
அருந்தனத்தால் என்னபயன்? இரவு நேரக்
குளியலுக்கு நீர்வேர்வை பெறவேண் டாமா?
கூடலிலே நாள்கழிப்போம் சதைஒப் பந்தக்
களிப்புநிலை பெருக்கவழி வகுப்போம் என்று
கன்னியிடம் கட்டழகன் வேண்ட லானான்.

முல்லைப்பூ வெண்குடையின் கீழே தங்க
முடியாட்சி செய்பவரே! நீர்நி னைத்தால்
ஒல்லியிடை மாதர்களோ மந்தை யாக
ஓடிவந்து மொய்ப்பார்கள். என்னைப் போல
அல்லிகளா? ஆம்பல்களா? ஊகூம், இல்லை!
ஆகாயத் தாமரைகள்! முட்டை முத்துப்
பல்லக்கில் ஏறுகின்ற பெண்கள். மண்ணில்
பட்டறியாப் பட்டடியார். தங்கக் கண்கள்!

மனுநீதிப் படிபிறந்த உங்கட் கந்த
மனுநீதிப் பிறவிகளே தகுதி யாவர்.
அனுபவிக்கும் சதைநீதிப் படிபி றந்த
அடியாளை விரும்புவது ஏனோ? நானோ
முனிநீதிப் பாதைக்குத் துரத்தப் பட்டேன்.
முள்வேலிக் கப்புறத்தில் வைக்கப் பட்டேன்.
தனிவழிஎன் வழி. உமது வழியோ ஆவி
தளிர்க்கும்வழி. நமக்குள்ளே பொருத்த முண்டா?

உயிர்மெல்லும் பல்காற்றுக் கூதிர் காலம்
உங்களுக்குத் தொல்லைதரும். எனக்குச் சற்றும்
பயமில்லை அதனிடத்தில். எதனால் என்றால்
பழஉடலில் புதுப்புண்ணுக் கிடமே இல்லை!
சுயமூச்சு துடிதுடிக்க ஊரா ருக்குத்
தொண்டுசெயும் மரப்பாவை நான்!உ மக்கு
அயலாவேன். மயலாக மாட்டேன்! மீன்கள்
அனல்மூச்சு விடுவதுண்டா? என்றாள் மங்கை.

குதிருக்குள் செல்இருக்க வேண்டும். மண்ணைக்
கொட்டிவைத்து இருக்கின்ருர். தங்கத் தூளை
எதற்காக எருவாகப் போட வேண்டும்?
ஈக்குத்த யானைத்தந் தம்எ தற்கு?
முதுநீதி போதிமர மனிதன் சொன்ஞல்
முழுவுலகம் கேட்காதோ? அதற்கெ தற்குப்
புதுமலரை முக்காடு போட வேண்டும்?
புரியவில்லை—என்றிட்டான் கத்திக் காளை.

வானகத்தில் பொன்மீன்கள் நூறு நூறு.
வழிகாட்டும் வடதுருவ மீன்நீ ஒன்றே!
தேனெடுத்த சிரிப்புப்பூ நூறு நூறு!
தேகத்தின் இதயமலர் நீஒன் றேதான்!
நானென்று இனிஎதுவு மில்லை. நீதான்
நான்.நான்தான் நீ!இயற்கை வளர்த்துத் தந்த
ஊனெதற்கு உயிரெதற்கு எனக்கு, வாழ்வில்
உனதுதுணை இல்லாத உலகெ தற்கு?

பூவுக்குள் எலும்பெதற்கு? நெற்றி வட்டப்
பொட்டுக்குக் காரம்ஏன்? ஊர்வ ணங்கும்
கோவிலுக்கேன் தடைமதில்கள்? அன்னத் துக்குக்
கொம்பெதற்கு? உனக்கெதற்குத் துறவு? உன்றன்
சேவடிக்கீழ் இவ்வுலகே வணங்கும். நீபோய்
செங்காவி முனிவர்களை வணங்க லாமா?
தேவைக்கும் தேவைக்கும் முடிவு கட்டத்
திருமணத்தில் சந்திப்போம் என்ருன் மன்னன்.

வேகவைத்த பூஆனேன். என்பால் நீங்கள்
விரும்புகின்ற மணமில்லை, என்ருள். ஈர
மேகத்துக் கென்னதடை பொழிய என்ருன்.
விதிஎன்ருள். என்தாயை அறிவீர். தேக
போகத்தை வியாபாரம் செய்த மாது.
பொன்னைப்பெற் றுத்தன்னை விற்ற கோதை.
தாகத்தை விழிமுனையில் வைத்தோர் கூடும்
சபைகளிலே நடனமிட்ட புடைவைப் பட்சி!

தேனைப்போல் அவளிருந்தாள். ஈப்போல் வீழ்ந்து
செத்தார்கள் இவ்வூரார். போட்டி போட்டு
நானென்றும் நீயென்றும் அவள்க ழுத்தில்
நனைமுத்தம் வைத்ததுண்டு. தாலி யைவைத்
தோனெவனும் கிடையாது! பட்டுக் கட்டில்
தோழமையை விடியலிலே முடித்து வந்தார்.
ஊனுக்கும் ஊனுக்கும் நெருக்கம் சேர்ந்த(து)
உயிருக்கும் உயிருக்கும் தொடர்பே இல்லை.

சோழன்முன் பாவாடை ஆட்டம் போட்டாள்.
சொக்கிவிட்டான் கோவலனும் வணிகன். உச்சி
ஏழடுக்கு மாளிகையில் துணைக்க ரத்தை
எதிர்பார்க்கும் இளமனைவி இருந்தும் கூட
யாழிசையால் உடலசைவால் மயக்கு கின்ற
என்அன்னை வீட்டுக்கு வந்தான். என்னல்
வாழமுடியா தென்ருன். உன்னை விட்டு
வாழமுடி யாதென்ருன். வருக என்ருள்.

ஊரெல்லாம் முரசறைந்து மணந்தீர் இன்று
உதறிவந்த தேனென்ருே- புகழ்ப்பா ரத்தால்
பாரெல்லாம் தேய்த்தவனுக் கழகு தாஞ
பாதியிலே இல்லறத்தை முறித்தல் என்ருே—
தேரழகி கேட்கவில்லே. இரண்டாம் கட்டில்
தேடாதே, மூடாபோ! என்ரு ளில்லே.
ஏராள திரவியங்கள் கொண்டு வந்தான்.
ஏற்பதற்கு மடிவிரித்தாள் காம மங்கை.

கண்ணகியின் கண்ணீரில் ஜோடி யாகக்
காதலர்கள் சுகநீச்சல் போட்டு வந்தார்.
எண்ணங்கள் அழுத்துமவள் பெருமூச் சைத்தாம்
இன்பமுற வருந்தென்ற லென்று கொண்டார்.
கண்ணகியோ வாடியபூ ஆஞள். என்தாய்க்
கட்டிலிலோ நசுங்கினபல் நூறு பூக்கள்.
கண்தூக்கம் விரட்டிவிட்ட தவளே. ஒவ்வோர்
காரிரவும் இவர்துயிலே விரட்ட லாஞர்!

கோவலனின் பாவத்தைப் போல நானும்
கோலமயில் வயிற்றினிலே வளர்ந்து வந்தேன்.
நோவுகளின் ஊஞ்சலிலே பிறந்தேன். தாயின்
நூறுபிழைக் கும்உருவம் கொடுத்து விட்டேன்.
ஆவலுக்குப் பதில்ஆஞள்; பொன்மு டிச்சால்
அவளுக்குப் பதில்கொடுக்க முடிய வில்லே.
தேவைகளின் அடிபட்டான். பொருள்வி ருப்பத்
தேவடியாள் புறமுதுகு காட்ட லாஞள்.

கடற்கரையில் குளிப்பதற்குப் போனாள். காதல்
கலைமகளைப் பின்தொடர்ந்தான் வணிகன். தங்க
உடல்நனைக்கும் வேலைக்குப் பிறகு, யாழால்
ஒலிவேலை ஆரம்பம் செய்தாள். 'சேரன்
கடற்பாறை ஆவேனோ? தழுவு கின்ற
கைகளுக்குள் இருப்பேனோ?' என்ற பாட்டின்
அடிஅடிக்கத் துடித்தெழுந்தான் துணைவன். ஆசை
அயலவர்பால் வைத்தாயோ? எனச்சி னந்தான்.

பொன்வேலி போடுங்கள் என்னைச் சுற்றி.
பொன்வளையச் சங்கிலியால் பிணைப்ப தென்றால்
என்கழுத்து இதோஉளது. உங்க ளோடு
இறுக்குங்கள் எனைத்தங்க ஆணி யாலே!
அன்பெனக்குத் தேவைதான். ஆனால் அந்த
அன்புக்குப் பொன்எலும்பு இருக்க வேண்டும்.
என்வியர்வை விழலாமா தரையில்? ஏந்த
எங்குளது பொற்சரிகைப் பட்டு? என்றாள்.

என்வீட்டில் மிதித்தேறும் படிக்கல்- நீங்கள்
இத்தனைநாள் பார்த்ததுதான்- தங்கம்! நீங்கள்
பொன்படியை அடுத்தமுறை மிதிக்கு முன்னே
பூரணமாய்ச் சிந்தியுங்கள். அதைமி திக்க
என்னஉங்கள் தகுதிஎன. முடிவு கட்டி
ஏற்றபடி நடவுங்கள். ராஜக் ரீடம்
என்முன்னால் தடையாக வைத்தால் கூட
எற்றிவிட முடியுமென்னால்! என்றாள் அன்னை.

உள்உயிரில் உதைபட்ட ப்ரபு,க ழுத்து
ஒடிந்ததுபோல் குனிந்துசென்ருன். துன்பச் சேற்றுப்
பள்ளத்தில் இருந்தவளின் இல்லம் சென்ருன்.
பணிந்துபணிந் தேபழக்கப் பட்ட மங்கை
உள்ளிருந்து மணிச்சிலம்பை எடுத்து நீட்டி
உயிர்த்துணையே கொண்டுசெல்க என்ருள். நெஞ்சில்
முள்தைத்த புருஆனுன், மடையன். "பாவம்
முடிந்த"தென்ருன். மதுரையிலே வெட்டுப் பட்டான்.

ஊர்இகழ, பத்தினியின் சாபம் தீய்க்க,
உத்தமிபோல் தாய்நடிக்க ஆரம் பித்தாள்.
தேர்நாளில் திருநாளில் ஆட வில்லை.
தெருப்பக்கம் வந்தாலே விழுமே கற்கள்!
ஊர்ஒதுக்கும் நிலைவந்தால் சந்நி யாசம்
உடல்மீது கட்டாயம் ஆகும் அன்றே?
பார்ப்பவர்கள் உமிழ்ந்திட்டார் காறி. அன்னை
படிப்படியாய்த் தனித்துமனம் அழுக லானுள்.

ஒதுக்கியதிவ் வுலகமெனை. இனிமேல் என்பெண்
ஒதுக்கிடுவாள் இவ்வுலகை. தாக போக
சதைக்கதையை முறித்தார்கள். என்பெண் யாரும்
சந்திக்க முடியாத துறவி ஆவாள்.
பொதுச்சபைகள் இருளட்டும் நாங்க ளின்றி.
புதுச்சுகங்கள் இனிப்பிறக்க வேண்டாம். வாழ்வில்
எதைஎதையோ செய்துவிட்டேன். கடைசி யாக
இதையும்நான் சந்திப்பேன்— என்ருள் அன்னை.

அதன்படிதான் எனைக்காவி அணிய வைத்தாள்.
அன்றுடம் ஆண்டவனைப் பணிய வைத்தாள்.
மதத்துக்குப் பருவப்பெண் எதற்கு? நல்ல
வண்டல்ஏன் சுடுகாட்டுக் கென்று அன்னை
இதயத்தில் நினைத்தாளா? பட்டுப் பூவை
எருமைகளின் குளம்படியில் சூட்டு கின்றாள்.
மதிப்புக்கு உரியஐயா! உங்க ளைநான்
மணப்பதற்குச் சாத்தியமே இல்லை என்றாள்.

சிங்கத்தின் மீதேறும் சிங்கம் கேட்டுச்
சிந்தையிலே செங்குருதி வடிக்க லானான்.
பொங்குதமிழ்ச் சுவடிகளை நெருப்பி னுக்கும்
புனலுக்கும் தந்ததுபோல் உன்னைப் புத்த
சங்கத்துக் குத்தந்தால் ஒப்பு வேனா?
சமாதானத் தால்முடிய வில்லை யென்றால்
எங்களுக்குத் தெரியாதா கத்தி தூக்கி
எண்ணியதை முடிக்கவென்று சொன்னான். சென்றான்.

முத்துமணி மேகலையும் சோழ ராசன்
முதல்மகனும் பேசியதை மறைந்தி ருந்து
முத்திரைமா தவிகேட்டுக் கொதித்தாள். இன்றே
முடியட்டும் இக்கதையென் றெண்ணிக் கொண்டு
புத்தமத முரடனைத்தன் னிடம ழைத்தாள்.
புத்திரிக்குக் கடும்மருந்தைக் கொடுத்துத் தண்ணீர்
கத்துகடற் கப்புறத்தில் விடுத்தி டென்றாள்.
கதைமுடிந்த தென்றில்லம் திரும்பி விட்டாள்.

மருந்தெடுத்தான். மேகலேக்குத் தந்தான். புத்த
மதப்பொருளோ எனநினைத்து மங்கை உண்டாள்.
விருந்தழகி உருமாற லானுள். வண்ண
மேனிகருத் தாள். மயக்க முற்ருள். புத்தன்
கருங்கடலில் படகேற்றி அவளைத் தீவுக்
கரைஒன்றில் கிடத்திவிட்டுத் திரும்பி விட்டான்.
கருகுமணி மேகலேகண் விழித்தாள். நீலக்
கடல்தீவில் கிடப்பதனை உணர்ந்து கொண்டாள்.

நஞ்சூட்டும் தன்தாயை நினைந்து நெஞ்சு
நைந்தமகள் தீவெங்கும் திரிந்தாள். அங்கே
கஞ்சமலர் மேல்புத்தன் இருக்கும் கோவில்
கண்டவுடன் அடிபணிந்தாள். 'புத்தா, நீதி
விஞ்சியஉன் மதத்தைஇவர் பயன்ப டுத்தும்
விதமிவ்வா றிருக்குமென அறிந்தி ருந்தால்
கொஞ்சமுமே ஐயமில்லே— நீப டைத்தே
கொடுத்திருக்க மாட்டாய்இம் மதத்தை'— என்ருள்.

புத்தனது சிலேயின்கீழ், பிச்சை வாங்கும்
பொன்ஓடு இருக்க,அதை எடுத்துக் கொண்டாள்.
அத்தமன நாள்வரைக்கும்— சோறில் லாமல்
அடிவயிற்றின் பசிநெருப்பு அணேவ துண்டா?
எத்தனைபேர் துடிக்கின்ருர் பசியால் இன்று'
என்னைப்போல்! அவர்துன்பம் போக்க வேண்டும்.
உத்தமியின் மருந்தாலே மாறி விட்ட
உருஎன்னைக் காப்பாற்றும் இனிமேல் —என்ருள்.

கோடாலி அரிவாளைக் கொண்டு கப்பல்
கொள்ளையடிப் போர்கப்பல் வரவே, மங்கை
கேடின்றித் தன்நாடு மீண்டாள். சோறு
கேட்கின்ற வயிற்றார்க்கு வழங்கி வந்தாள்.
ஓடோடிப் பணிபுரிந்தாள். நாட்டு மக்கள்
ஒவ்வொருவர் நாக்கினிலும் புகழாய் நின்றாள்.
மேடையிட்டுப் பேசாமல் மக்க ளுக்கு
வேண்டியதை யேசெய்தாள். தூங்க வில்லை.

தொண்டென்று எதையெதையோ சொல்கி றார்கள்.
தொண்டல்ல அவையெல்லாம். இதுதான் தொண்டு.
சண்டைசெயும் பகைவேலை தொண்டா? கோவில்
தாழ்வாரக் கதாகாலட் சேபம் தொண்டா?
கண்டவர்கள் கண்கள்ளாய் இருக்கும் ஆட்டக்
கலைதொண்டா? இசைதொண்டா? ஊகூம், இல்லை.
உண்டிகொடுத்[துயிர்கொடுக்கும் தொண்டே தொண்டு.
உமிஎல்லாம்! உள்ளிருக்கும் நெல்இ தொன்றே.

பட்டாடை பாவாடை கட்டிக் கொண்டு
பால்காய்ச்சி ஊற்றுவதாய்க் கதைகள் பண்ணும்
வெட்டிகளால் பயனுண்டா? பொழுது போக்கு
வேலைகளால் பயனுண்டா? கூடிக் கூடிப்
பட்டிமன்றம் போடுவதால் என்ன லாபம்?
பலகறையின் சலசலப்பா கவிதை ஆகும்?
மொட்டைகளுக் கெட்டுமுழச் சரப்பூ ஏது?
முழுப்புகழும் மேகலைக்குத் தானே உண்டு!

முடிமன்னன் அவளிடத்தில் வந்தான். என்னுல்
முடிந்தது‌ணை ஏதேனும் உண்டோ என்ருன்.
தடியடியால் மக்களுக்குப் புண்கொ டுக்கும்
தடியர்படை கலைஎன்ருள். லஞ்சம் வாங்கிக்
குடிகெடுக்கும் பட்டாளம், கனவில் கூடக்
குற்றமற்ருே ரைஎல்லாம் பிடித்துக் கைகால்
ஒடிக்கின்ற சிறைச்சாலை, வேண்டாம். நாடு
உயரட்டும் அறச்சாலை யாக — என்ருள்.

அப்படியே செய்ததனுல் அரசன் நாடு
அமைதியுடன் மகிழ்ந்திருக்க, செல்வி, யார்க்கும்
உப்புச்சோ றளித்துவந்தாள். மாத விக்கோ
உலைமூச்சில் அழுக்காறு! தனக்கு யாரும்
அப்பழுக்கில் லாதபுகழ் தராமல் எங்கோ
ஆருக்கோ தருகின்ருர் என்று வெந்தாள்.
மைப்பழக்கக் கண்ணழகி உருமாற் றத்தால்
மாதவிக்கே மகளென்று தெரிய வில்லை!

அரசாங்க புத்திரனே, துணைகா ணுத
அன்றிலைப்போல் துடித்துக்கொண் டிருந்தான். காம
சரசாங்கி யாகிவிடு- வாழ வைக்கச்
சந்நியாசம் நீத்துவிடு என்று கேட்டுத்
திருமணத்தால் ஜோடிமலர் ஆவோம் என்று
சிந்தித்தேன். கீழ்வானில் மறைந்து விட்டாய்.
தரைக்கடியில் இருந்தாலும் சரிதான். வானில்
சஞ்சரித்தா லும்சரிதான். விடவே மாட்டேன்.

அவளுக்குத் தெரியாது. காதல் செய்தல்
ஆண்டவனின் கட்டளைதான். துறவு பேசும்
எவனுக்கும் தெரியாதா அவன்வ ளர்ந்த
தெப்பாலால் என்றகதை. இல்லா மோட்சக்
கவலைகளால், இருக்கின்ற வாழ்வை வீணாய்க்
கருக்குவது விவேகமில்லை. சந்த னத்தைக்
குவிந்திருக்கும் மார்பின்மேல் பூச வேண்டும்.
கூடாதே அதைநெருப்பில் இட்டெ ரித்தல்.

புத்தனுக்குச் சூட்டுகின்ற பூக்கள், வண்டு
புணராத பூக்களன்றோ! பூசைச் செந்நெல்
அத்தனையும் கருவன்றோ? இதயம் கூவி
அழைத்தவுடன் வருவானேன் காற்று? நீல
நித்திரைஏன் கண்களுக்கு? தண்ணீர்— சோறு—
நித்தம்ஏன்? இதைமட்டும் விலக்கு வானேன்?
அத்தமனம் மாலையிலே வரலாம். ஆனால்
அதிகாலை முதற்கொண்டே இருள லாமா?

இவ்வாறு கண்ணீரால் கழுவப் பட்ட
இதயத்தைச் சுமந்தபடி குமரன், நாளும்
செவ்வானத் தடிவரைக்கும் தேட லானான்.
தெரியவில்லை அவள்உருவம். அருவ ருப்பு
வெளவால்கள் ஏராளம் கண்டான்; பஞ்ச
வணக்கிளியைக் காணவில்லை. உயிர்மு டிச்சைக்
கௌவுகின்ற களைப்பாலே விழுந்தான். வீழ்ந்த
குலமகனைத் தூக்கினஓர் பெண்ணின் கைகள்.


மார்பின்மேல் தவழுகின்ற மணியை நீல
வானெல்லாம் தேடிவந்தேன். அன்பே, இந்த
ஊருக்குள் நீஇருந்த தால்தான் போலும்
உயிரோடு நான்இருந்தேன். இனிமேல் நம்மைப்
பேரிடியும் பிரிக்கமுடி யாது! நீலப்
பிணச்சாவும் பிரிக்கமுடி யாது! தங்கத்
தேருக்குள் ளும்மாரன் ஊருக் குள்ளும்
தேடுபவர் இல்லாமல் இருப்போம் என்றான்.

ஏன்ஆனாய் கருநிலவாய்? என்றான். மங்கை,
இதுமதத்தின் ரசவாதம் என்றாள். கார்மைத்
தேனானாய். மரகதமீன் ஆனாய். என்றான்.
திருமகனும் திருமகளும் நடக்க லானார்.
ஊன்கேள்விக் கூன்பதிலும் துடிது டிக்கும்
உயிர்க்கேள்விக் குயிர்ப்பதிலும் தேவை தான்,உன்
நானும்என் நீயும்பூ மாலை மன்றல்
நடத்திக்கொள் வோம்என்றான். சம்ம தித்தாள்.

இருவரிணைந் தின்பத்தை நோக்கிச் செல்ல
இருந்தார்கள். நடந்தார்கள். எதிரே வந்தான்
மருந்துவைத்த மதஅதமன். கருப்புச் சாவு
மண்ஆகா மல்மீண்டும் பெண்ஆ னாளே!
விரியக்கூ டாதேஇப் புஷ்பம்! என்று
வீசிவிட்டான் கட்டாரி ஒன்றை. வேலை
தெரியாத அக்கருவி மன்னன் மார்புள்
சென்றுதுயில் கொண்ட(து)அவன் ஒடிந்து வீழ்ந்தான்.

தலைவனிடம் குனிந்தமயில் 'தனிமை தந்த
தாய்வென்றாள். தாங்கள்தோற் றீர்கள்' என்றாள்.
கலைமகனோ கடைசிமுறை தொட்டான். மங்கை
கடைசிமுத்தம் தந்தவுடன் அமர னானான்.
தலைநிமிர்ந்தாள். பெண்மூச்சா, தீக்கு ழம்பா—
தழுவுகின்ற மார்த்துடிப்பா, இடிவெ டிப்பா?
கொலைகார உலகத்தைப் பொசுக்கு கின்ற
கொடும்பார்வை திறந்திட்டாள். குமுறு கின்றாள்:

சுயநலத்தின் ஓருருவே, தாயே! சாஸ்த்ரச்
சுவடிதொடும் மதத்தீரே! திருப்தி தானே?
புயலைப்போல் களமோதல் செய்யும் சிங்கம்
புழுதியிலே கிடப்பதுவும், எங்கள் வாழ்வு
கொயுமுன்பே நசுங்கியபூ ஆன தும்நீர்
குளிர்வதற்குப் போதுமன்றோ? வேண்டு மென்றால்
உயிரோடு இருக்கும்என் மாமி சத்தை
உம்பற்கள் குதறட்டும். பசிதீ ரட்டும்!



# கண்ணீர்க் கண்ணகியும் காதல் மன்னனும்

தனிமையினால் துன்புற்றாள். ஈர நாக்கு
தடவாத தமிழாகத் துவண்டாள். காலம்
இனிஎன்றும் மாறாதா? இருண்ட வாழ்வு
எப்போதும் விடியாதா? என்று கண்ணீர்
பனித்தபடி இருந்திட்டாள். நெருப்பு வைக்கும்
படுக்கைக்கும் கண்ணகிக்கும் பகைதீ ராதா?
கனிஇனிமேல் கடிபடவே படாதா? தாலி
கட்டியவன் அவளைஇனித் தொடமாட் டானா?

ஓங்குகின்ற பொன்மலைகள் இருந்தும், சொந்த
உறவாளன் பிரிந்தென்ன வாழ்வு —என்று
ஏங்கிக்கொண் டேயிருந்த கண்ண கிக்கு
எதிர்வந்தான் முடிமன்னன் வள்ளல் பேகன்!
வீங்குகின்ற மனமகிழ்ச்சி யோடு, மங்கை
விருந்தினனை வரவேற்றாள், வருக என்று.
வேங்கைஒரு மயிலைஅணைத் ததுபோல், பெண்ணை
வேந்தனணைத் துத்தழுவிச் சுமந்து சென்றான்.

தேரெடுத்துப் பிணக்களமும் அமைக்கக் கூடும்.
செய்யவில்லை. அதைமுல்லைக் களித்தான் பாரி!
ஈரஉதட் டால்தரலாம் மரணத் தீர்ப்பு.
இச்சென்றும் சுவைமுத்தம் தரலாம் மன்னன்!
வேருக்கு இடங்கொடுக்கும் பூங்கா மண்தான்
வீழ்ந்தோரின் பிணந்தின்னும் குழிப்ப டுக்கை!
வாரிவழங் கிக்கைகள் சிவந்த பேகன்
வகைதெரிந்து பயன்படுத்தத் தெரிந்த வன்தான்!

தாழம்பூ வேஎன்முன்! எவ்வி தத்தில்
தாழ்ந்தவள் நான்? எனக்கேட்டாள்! மகிழம் பூவே?
ஆழமுள்ள நீர் நிலையில் திருகு கின்ற
அழகியதா மரைப்பூவே! அள்ளிக் கிள்ளித்
தோழமையில் நெருங்கிடுவோம், என்றான். பின்னர்
சொன்னபடி செயலாற்ற ஆரம் பித்தான்.
வேழத்தின் தந்தம்போல் இருந்த மங்கை
விருப்பத்தால் தாழம்பூ வாய்க்கு ழைந்தாள்!

கவலையினால் கன்னத்தில் ஓடிக் காய்ந்த
கண்ணின்நீர் உப்புகளைச் சுவைத்தெ டுத்தான்!
அவலந்தான் பெண்பிறவி. அவ்வப் போதே
அணைக்காவிட் டால்எரிந்து போகும் — என்றாள்.
குவளைமல ரே!இனிமே எரித லில்லை!
கோடிவரை பிரிவுமில்லை; சரியா? என்றான்.
அவளுக்கும் அவனுக்கும் நடுவில் லாமல்
ஐக்கியமா னார். பிறகு பிரிய வில்லை.

இன்றைக்கு இனித்திருக்கும் இந்த மங்கை
எவ்வாறு நேற்றிருந்தாள்? பிரிவு நோயின்
தின்பண்ட மாயிருந்தாள். கொதித்து வந்த
தேகத்தால் புரண்டபடி இருந்தாள். தேய்ந்த
தன்இமையைத் தனிமையினால் மூட வில்லை.
சாயுங்கா லம்என்னும் சாயக் காலம்,
கன்னிக்கோ, குறையுமுயிர் தீயுங் காலம்!
கார்காலம் இவளுயிரை மேயுங் காலம்!

பிரியஅத்தான் பிரிய—அத்தான் ஆனால்— தங்கப்
பெண்என்ன செய்திடுவாள், துடித்தி டாமல்?
கரியகுழல் காட்டினிலே புகைஊட் டாமல்,
கால்களிலே சிலம்போசை இன்றி, இன்பக்
கிரியைகளுக் கிடமான இடையில் ரத்னக்
கிரணமணி மேகலைபூ ணாமல், பற்றி
எரிந்ததொரு ஓவியம்போல் இருந்தாள் மூச்சு
ஏன்?ஊனின் சுமைதான்ஏன்? என்று நொந்தாள்.

கச்சிருக்கும் என்மார்பில். குளிக்கும் போது
கண்ணாடி ஆற்றின்தண் ணீர்இ ருக்கும்.
தைச்சிருக்கும் மன்மதனின் அம்பு! இன்றோ
தனிமைக்கண் ணீர்உப்புப் பூத்தி ருக்கும்!
அச்சடிக்கும் முத்தகளம் கன்னம் அந்த
ஆசையுத்த களமும்உப் பளமா யிற்றே!
வச்சிருக்கும் என்மார்போ உலைக்க ளந்தான்!
மாலைமுத்து பொரிகின்ற இடந்தான் என்றான்.

படுஎன்பான் என்துணைவன். மஞ்ச மீது
படுப்பேன்நான். என்துணைவன் தொடுவான். இன்றோ
படுஎன்றான் என்துணைவன். கோடி துன்பம்
படுகின்றேன், நான்ஒவ்வோர் நொடியும்! அன்னோன்
படுஎன்றால் அகப்படுவேன் அவன்கை கட்குள்.
பதர்போலத் தனிப்பட்டேன் இன்று! என்றும்
அடுத்தவனாய் இருந்தஅவன் இப்போ தேனோ
அடுக்காத செயல்செய்து பிரிந்து போனான்!

வளையலவன் செங்கோற்குக் கூடா(து) என்றன்
மலர்க்கைக்கும் கூடாதா? பின்ஏன் என்னை
இளைக்கவைத்தான். வளைகழன்று வீழ வைத்தான்.
இழுக்கவைத்தான் எனைமூச்சுப் பாருங் கல்லே!
குளிப்பதற்குப் பன்னீர்த்தீ, தாகத் துக்குக்
குடிப்பதற்குப் பசுநஞ்சு, இவற்றுக் கெல்லாம்
அளிப்பதற்கு என்உடலும் உயிரும் —என்று
ஆக்கிவிட்டுப் பிரிந்ததுஏன்? புளித்த தேன்,தேன்?

கண்ணாடி பார்க்கின்ற அழகி. ஊரார்
கண்நாடிப் பார்க்கின்ற அழகி. வந்து
உண்ணீர்உண் ணீரென்று அழைக்கும் மாது—
ஒருத்தியிடம் பறிகொடுத்தான் நெஞ்சை. அந்தக்
கள்நீர்ப்பூக் குழல்அணங்கால் குளிர லானான்.
கண்ணீர்ப்பூ உதிர்த்துவந்தேன் தனித்திங் கேநான்!
திண்டுமெத்தை அவரிருவர் தீண்டு மெத்தை.
தினப்பழக்கம் தினப்பழக்க மாயி ருந்தார்!

மாலைஎன வந்ததுஓர் நெருப்பு நேரம்!
மலைகளைஎன் நெஞ்சுள்ளும் சுமந்த என்பால்
மூலமொழி யாம்தமிழின் புலவன், பாட்டு
மூச்சுக்கா ரன்கபிலன் வந்தான். முத்து
மாலைகளைப் பரிசளித்தேன், கண்ணீர் முத்து
மாலைகளைத் தொடுத்தபடி! சுருக்கம் நெற்றி
ஓலையிலே கவிஎழுத, விழியில் வெள்ள
ஓட்டம்ஏன்? எனக்கேட்டான். மவுன மானேன்!

முந்தானைப் படைமன்னா! தாலிப் பெண்ணின்
முன்தானைத் துயில்நீத்தல் சரியா? இங்கே
சந்தனத்தைப் பூசிக்கொண் டிருக்க வேண்டாம்
தழுவுகொடி யைஅலைக்க வேண்டாம்! பூக்கள்
வெந்திடவா? நல்மணம்தந் திடவே அன்றோ?
விழிவெள்ளக் கண்ணகியைக் காப்பாய் என்று
செந்தமிழ்ப்பா வலன்கூற, ஏற்றுக் கொண்டு
செகராசன் திரும்பிவந்தான். இரவே நீடு!



# இனித்த சுவை

பொறிதொடுக்கும் விஞைஐந்துக் கும்தன் தேகப்
புத்தெழிலே விடையாக்கும் பெண்ணே! யாரும்
வெறுக்காத இரவலரே! பொருட்சி றப்பு
விரிக்கின்ற கவிதைகளுக் குயிரே! கூந்தல்
முறிக்கின்ற இடைமாதே! அவிழும் போதே!
முதுகாலே நீந்துகின்ற படகே! கைகள்
பறிப்பதற்கு வளரும்தா வரமே! உன்றன்
பட்டினத்தை விட்டகன்று வாடி இங்கே!

அமுதகடம் சுமப்பவளே! நாளும் என்றன்
அகலத்தில் துயில்கின்ற நெடில்நீ அன்றோ?
சமயவனச் சடங்கிற்குப் பிறந்தோம். சாவைச்
சந்தித்து விட்டால்ஏழ் நிறங்கள் உண்டா?
இமைக்கதவை இறுதிமுறை சாத்தி விட்டால்
எட்டுச்சாண் சதைநடன அழகோ யாதா?
நமக்கிருக்கும் நாள்சிலதாம். சிந்தித் துப்பார்,
நல்லதுவா ஊடல்கொண் டிதைவீ ணாக்கல்?

தைமாதம் தாய்மாதம் குழந்தை மாதம்.
சதைமீது மதனம்பு பு தைமா தம்;வி
தைவிழிக்கும் புதுமாதம்; ஆடி மாதம்.
தண்ணீர்க்கா விரிப்புனலில் ஆடும் மாதம்.
ஐயத்தைஇடையாலும் வியப்பைத் தங்க
அங்கத்தா லும்ஆக்கும் பெண்கள், ஈரம்
நெய்கின்ற மேகமழைக் காலத் தில்,தம்
நேரத்தைத் தனிமையிலே போக்க லாமா?

முத்தமிழின் இயல்விளக்கம் நன்னூல் என்ருல்
மூன்ருவ தைவிளக்கும் இடையாம் நன்னூல்.
வித்தார முத்தார விழாந டத்த
விட்டிலுக்குத் தீப்பூவை மலர்த்தும் தீபம்
அத்தமிக்கும் விடியல்வரை அருக ராவோம்.
அமணமதம் சார்ந்திருப்போம் கோவை வாயுள்
நித்திலக்கோ வைவைத்தாய் சிரிப்ப தற்கு.
நித்திரைக்கோ வைதாஉன் கோவை ஒற்றி.

அந்திஇதைக் குளிர்வதனல் சிலந்தி என்பேன்.
அகம்கூடா தென்பவரை எதிர்ப்பேன். மார்புப்
பந்துகளை உயர்திணைதாம் என்பேன். கச்சைப்
பழக்கூடை என்றிடுவேன். ஓங்கி வீங்கும்
விந்தியத்தை மேற்றிசையில் காண்பேன். இன்ப
விருந்துதரும் நீஇளையை என்பேன். உன்றன்
தந்தஉடல் தராதஉடல் ஆக லாமா?
தனிமையிலேன் கனிமெய்யை நீடிக் கின்ருய்?

ஈதல்இதழ்க் கடன்என்பேன். கொடுத்த வாறே
எடுக்கின்ற செயல்திறமை இதழ்க்கே என்பாய்
மோதிரம்போல் முற்றுகையை நானும், அங்க
முழுஅழகை நடுவில்நீ யும்வ ளர்க்க
ஆதரவே பால்என்போம். தேன்உ தட்டால்
அச்சு வை! அச் சுவையைவிடச் சுவைவே றேது?
நீதனியே ஆகாய நிலவாய் நிற்க
நீலவண்ணக் கடலாய்நான் அலைகின் றேனே!

ஐயாற்றுச் சுகம்தர,வா. உலகம் கண்ட
ஆதிரசத் துணைதர,வா. இரட்டை எச்சில்
செய்கையிலே செயம்பெற,வா. ஒட்டும் வண்ணச்
சித்திரமே! மாரன்அத் திரமே! தென்றல்
தையாமல் சென்றிடுமா தனித்தி ருந்தால்?
சகப்பொழுது இதுசாகப் போதா முன்வா.
நெய்தலென்றால் பிரிவென்றார் இலக்க ணத்தார்;
நெய்தலினைக் குறிஞ்சியிலே நாம்ப டைப்போம்.

இடை-இற-வல் வளர்ப்பவளே! மீட்டு கின்ற
என்மடியில் நீவீணை ஆக வேண்டும்
முடியாட்சி அகற்றிடுவோம். மூச்சால் வாழ்ந்தோம்;
முத்தத்தால் வாழ்ந்திடுவோம் இனிமேல்! கூந்தல்
சடைமாதே. பேசுங்கண் சாடை மாதே.
தமிழ்த்தேகம் தரவருக. எட்ட நின்று
தடைபோட வாமாலை நேரம்? தங்கச்
சதைபோட்ட கனியேசொல். கொடிபோல் தொற்று.

தூங்கிவிடும் நெய்த்தீபம் விடியல் வந்தால்.
தூங்காத தீபமன்றோ ஆசை! மண்ணை
நீங்குகின்ற காலம்வரை இந்தச் சூட்டை
நிச்சயமாய் அனுபவித்தே தீர வேண்டும்.
தீங்கனிக்குப் பசிப்பதில்லை என்பதாலே
தின்னுமல் இருக்கிறதா உலகம்? நீந்தும்
பூங்காற்றைத் தடுத்திடுவோம் சேர்ந்து. இந்தப்
பொற்காலம் போற்,காலம் இல்லை என்போம்.

வாழ்நாள்,வாள் நாள்அன்றோ நீஇல் லாமல்?
மன்மதனின் கொடிகூந்தல் என்பேன்; உன்றன்
ஏழ்வண்ண அசைவுகளே நடனம் என்பேன்;
இரவுக்கு இரைஆவேன் என்பேன்; வீழ்ந்து
மூழ்குகடல் வெண்முத்தை நெற்றி நல்கும்
முழுப்பட்டமே உன்பெண்மை யண்மை தேவை.
ஆழ்வாரே நாயகன்மார் என்ற காதல்
அத்துவைதம் காண்பதற்குத் தயங்க லாமா?

மலைவீங்கி மேல்கடலில் நிழலை வீழ்த்தும்
மாநாட்டு மருடபதி சேரர் மன்னன்
அலைமூச்சுப் பேச்சுதர, சேலை ராணி
ஆசைக்கு வழிதந்தாள் முத்துக் ரீடத்
தலைமகனின் விழிக்குவிழி தந்தாள். முத்தச்
சந்திப்பில் தித்திப்பு தந்தாள். ஆடை
கலைமகளாய் ஆகையிலே முரசு ஓசை
காற்றில்வர, 'காண்போம்வா' என்ருன் மன்னன்.

பெண்ணுக்குத் தாலியைப்போல் மதிப்பு மிக்க
பெற்றியது ஜயமுரசு மன்ன னுக்கு.
கண்ணைப்போல் உயிரைப்போல் மானத் தைப்போல்
காத்ததிலே வியப்பில்லை. நாளும் ஆற்றுத்
தண்ணீரில் துப்புரவு செய்து, வண்டு
சந்திக்கும் பூமாலை சாத்தி. ஊரார்
கண்மகிழ உலாவந்து, திரும்பிக் கோட்டைக்
கட்டிலிலே நிருமித்தல் தினவ ழக்கம்.

முதலிரவுக் கட்டிலிலே அமர்வ தற்கு
முழுஉரிமை கணவனுக்கு மட்டும் தானே!
அதிகாரி ஆயிரம்பேர் இருந்த போதும்
அரியணையில் அமர்வதுயார்? மன்னன் தானே!
பொதுமகளும் மட்குடத்தைச் சுமக்க லாமே!
பொன்மகுடம் வேந்தனன்றி யார்சு மப்பர்?
அதிர்வேட்டு முரசுகட்டில் அப்ப டித்தான்;
அதில்முரசை விட்டெவரும் அமர்தற் கில்லை.

பூவுடம்புத் தேவியது தோளில் கையைப்
போட்டபடி வந்திட்ட சேரன், அங்கே
ஈ-விருந்துச் சாப்பாட்டில் கிடப்ப தைப்போல்
எழில்முரசு கட்டிலிலே அசைவில் லாத
ஓவியம்போல் அளவிறந்த களைப்பி னாலே
உறங்கிக்கொண் டிருந்ததொரு உருவைக் கண்டான்.
தாவுகின்ற அரியானன், நெஞ்ச ரங்கில்
தாவுகின்ற சினத்தீநாக் களால்எ ரிந்தான்.

சுடுகாட்டுத் தலைமண்டை மழலைப் பேச்சு
சொல்லுவதா? புலனடங்கி வணங்கும் கோவில்
இடைநுடங்கும் நடனஅரங் காக லாமா?
இரை,செல்லுக் குக்கவிதை ஓலை யா?என்
படைமுரசு கட்டிலிதோ எழுச்சி மேடை.
படுத்திடுவர் மரணத்தில் பகைவர். ஊரான்
படுப்பதற்கோ இக்கட்டில்? தொட்ட முட்டாள்
பறிகொடுக்க வேண்டாமா உயிரை— என்று

வாளெடுத்தான். வாட்கண்ணாள் திகைத்து நின்றாள்.
வாள்வேந்தன் அருகணைந்தான். உறங்கு கின்ற
ஆள்யாரென் றறிந்திட்டான். மோசு கீரர்!
ஆறுதொட்ட தணல்மலைபோல் குளிர லானான்.
தோள்தழுவும் துணைவந்தால் மறைந்து போகும்
தோகையின்தே மலைப்போலச் சினத்தீ மாய
தூள்மணக்கும் அகில்தீயாய் முறுவல் கொண்டான்.
சுகநிகழ்ச்சி முன்னறிக்கை முறுவல் தானே!

உதட்டுக்குத் தீனிதரும் பெண்ணே. என்னை
உன்இமையாய்க் கொள்கின்ற கண்ணே! இந்த
அதிகாரக் கட்டிலிலே படுத்த ஆளை
அடியோடு வெட்டாமல் நிற்கின் றேனே.
எதனாலே? இதுதானே உன்வி யப்பு?
இதோவீர கவசங்கள் சுமக்கும் மார்பில்
பதிவதுண்டு சிலசமயம் குழந்தை கால்கள்.
பரந்திருக்கும் மார்புக்கு அதல்ல மாசு!

பகைமன்னர் முடிவைத்து வணங்கு கின்ற
பாதம்என் பாதந்தான். ஆனால் காதல்
நகைமாதின் புருப்பாதம் வணங்க நேரும்
நாள்சிலவும் வராதிருப்ப தில்லை யன்றோ?
தொகைச்செல்வம் வழங்குதற்குக் குவியும் இக்கை.
துணைமலரை ஏந்தவிரி வதுமி தானே!
புகைகின்ற மயானத்தைத் தோண்டு கின்றோம்.
பூந்தோட்டம் தோண்டுகையில் அழுகி றோமா?

உதைக்கின்ற காலுக்கு முத்தம் வைக்கும்
ஒருநிலைமை இந்நிலைமை. தமிழின் செய்யுள்—
எதைவிடவும் சிறந்ததன்றோ? இக்கட் டிற்கு
இவரைவிடத் தகுந்தவரார்? இலையே யாரும்!
அதிர்கின்ற முரசொலிதான் இவர்தம் பாட்டும்.
ஆகாயம் முரசொலியைக் கரைக்கும். ஆனால்
எதிர்காலம் இவர்பாட்டை ஏந்தி நிற்கும்.
இவர்பாட்டில் என்புகழும் நிலைத்தி ருக்கும்.

பொன்பாரம் முதுகொடிக்கும் யானை மந்தை
புறப்படட்டும் இவரோடு பிற(கு), இப் போது
மென்சிவிறி எடுத்து நீ. பட்டுக் காற்றால்
மெல்லமெல்ல வீசுகிறேன் என்று ரைத்துத்
தென்னரசன் பொன்விசிறி வீச லானான்.
சேரக்கோ மதிப்பீடு வென்ற தங்கே.
வன்முறையும் பொன்முறையும் தெரிந்த மன்னன்
வரலாற்றில் மென்முறையால் இடம்பி டித்தான்.



# எச்சில் ஊஞ்சல்

சாரப்பள் ளப்பூவை மலர்த்தும் மாலை.
சார்ஆயங் கூடுகின்ற நீல வேளை.
ஈரத்தில் இருக்கின்ற நேரம். யாரும்
தூரத்தில் இல்லாத நேரம். ஸ்பார்டா
ஊருக்குள் ஒளிமுட்டை நிலவு, தங்க
ஒட்டைவழி ஊற்றியது குளிர்வெ ளிச்சம்.
ஆரம்போட் டார்எல்லாம் தார தம்ய
அசைவசுகம் ஆரம்பித் தார்;ம கிழ்ந்தார்.

"கடிநெடில்தான் பாம்(பு);அரசி நீநான் நித்தம்
கடி,நெடிலாம் கரும்பு (உ)னது பட்டு வேலிப்
புடைவைகளோ கழிநெடிலாம் இரவுப் போதில்.
பொன்னம்ப ழப்பெண்ணே! உன்னை விட்டு
விடுதலறி யாருக்கு வீடு நீயாம்.
விழாஎடுக்க விழும்உடையாய். நீட்டு கின்ற
சடைமுனிவ ருக்குஞ்சஞ் சலம்கொ டுக்கும்
சதைரதம்நீ சமாச்சாரச் சடங்கு மாது!

அழகுகளை மிஞ்சவைத்து, அங்கும் இங்கும்
ஆடைகளைக் கொஞ்சம்வைத்து, பார்வை தின்னப்
பழரதத்தை நடத்துகின்ற பெண்ணே! விட்டுப்
பகுபதமா? பாகுபத மான மானே!
கிழமையுள்ள இளைஞருக்குத் தனைக்கொ டுக்கக்
கிழக்காந்தி நிலவையழைக் கின்ற பூவே!
செழித்தசதைக் கனியே,என் தனிமை என்ற
தேவைக்கு முடிவுதரும் முடிப்பொன் ராணி!

தோட்கிளியே! தோழமையில் சிலிர்ப்ப தற்குத்
தொட்டபெட்டி ரத்தினமே! முத்துப் பூவே!
ஆட்டிடைய ருய்வளர்ந்தேன். நடன மென்னும்
ஆட்டிடைச்சி உனைஇன்று சந்திக் கின்றேன்.
ஸ்பார்ட்டாவின் பொன்மலரே! பிரியம் என்அப்
பழுக்கற்ற அப்பா!என் பிரியம் உன்மேல்!
நாட்களுக்கு முடிவிருந்தா லும்இ ருக்கும்.
நங்கையுன்மேல் என்பிரியம் முடிதற் கில்லை!

ஒப்பாரி ஓயாத கடல்கொக் கோக
உறவுகொள்ளும் மலைக்கரையின் உச்சி மீது
அப்பூதி அடிக்கின்ற ஈரக் காற்றின்
அணைப்புக்குள் துயிலுகின்ற பளிங்கு மாடம்.
சப்ரமஞ்சம். நிர்வாண விளக்கின் சாட்சி.
சகவாச சந்தோஷம் கண்டு வேர்வை
உப்பெடுக்கும் யாத்திரையில் ஈடு பட்டு
ஒப்புவித்தார் ஒருவரிடம் மற்றோர்— தம்மை.

இலனென்று வந்தோற்கு இந்தா என்று
ஈபவரே தேவைஎன்றும். ஒப்புக் காக
நலந்தானே? என்பவரால் என்ன லாபம்?
நடிப்பாலே நிரம்பிடுமா வயிறு? ராணி
ஹெலன்அழகி. ஈஎன்ற ஈக்குத் தேன்பூ
சிலரைப்போல் திரைபோட்டுக் கரந்தி டாமல்
சித்திரைச்சித் திரநிலவாய்த் திறந்து தந்தாள்.

“மறவீர ரேஎன்னை மறவீர். இந்த
மருவீர மலர்மருவிப் பெறுவீர் இன்பம்.
புறத்தைஅப் புறத்தேவைத்(து) அகத்தை அந்தப்
புரத்தில்வளர்ப் போம்வாரீர்! சேவல் காலை
இறக்காதா வரும்வழியில்? இரவின் ஆயுள்
என்றைக்கும் இருக்காதா? கொடிஇ டுப்பு
இறக்—காமக் கனிவளர்த்தேன். இந்தச் சொந்த
இளநீரை இளம்நீர்வந் தெடுக்க லாமே!

வேட்டைக்குச் சென்றுள்ளான் எனைம ணந்த
மெனிலேயஸ் மாமன்னன். இங்கே காமச்
சேட்டைகளில் நெருங்குகிறோம். விலங்குத் தாலிச்
சிறைக்குள்ளே திருடுகிறோம். திரும்பும் போது
காட்டுத்தேன் அவர்கொணர்வார். ஈதொ டாத
காமத்தேன் இப்போது தருகி றீர்நீர்.
காட்டுத்தேன்; சைவமலர் ஈக் கலப்பு!
காமத்தேன் இருபாலின் மெய்க்க லப்பு!

நோய்அகலத் தோய்அகலம் தருவீர். ஐந்து
நுணுக்கங்க ளேப்பகிர்வோம். வான்வி ளக்கோ
தேய்நிலவு. திரள்நிலவு நான்! வளர்ந்த
திருவார்ஊர் தேர்;கணிகை. நானே சொந்த
நேயர்விருப் பம்.ஒருநூல் கூட இன்றி
நெய்பவரே— மெய்ச்செய்கைத் தலைவீர்! எச்சில்
பாயிரத்தைத் தொடங்குங்கள். பிறகு, மாம்சப்
பதிகத்தைத் தொடருங்கள்''— என்ருள் ராணி.

திரட்டுப்பால் இரட்டைப்பால், தேவை யுள்ள
தேக்கப்பால் — முப்பாலும், மாரிக் கூந்தல்
கறுப்பைம்பால்— ஆகமொத்தம் எட்டுப் பாலே
கட்டில்பால் ஆக்காமல் எட்டப் போனல்
அரசியழ கெட்டிப்பால் ஆகும்- அப்பால்
அப்-பாலே வாழ்வெனக்கு எதற்கு? உன்னைத்
தருகஎன்பால். அப்பாலைக் கடலில் போவோம் —
தங்கங்கட் டில்லறத்தைத் தொடர்வோம் என்ருன்.

மெனிலேயஸ் திரும்பிவந்தால் எனக்குச் சாவு
வேலைவைப்பான். உனைத்தங்கச் சிறையுள் வைப்பான்.
அனியாயம், உன்அழகு அவனி டத்தில்
அவ்வாறு வீண்ஆதல். பருவக் கிள்ளை
கனிகளின்மேல் சுதந்திரமாய்ப் பறக்க வேண்டும்.
கருப்புவரிப் புலிக்கூண்டில் குமைய லாமா?
அணிச்சப்பூ வே!வா,நாம் என்,ட்ராய் நாட்டில்
அதிரசக்கா மத்துப்பால் பயில்வோம் —என்ருன்.

இருவருமே புறப்பட்டார், ஈர நீல
இருட்டினிலே நெடும்பயணம். புரிநூ லேணி
இறக்கியதக் காதலரைக் கடற்பள் ளத்தில்;
ஏந்தியது மரத்தெப்பம். கரிக்கும் ஆழப்
பரப்பின்மேல் நீளம்செய் திட்டார். பவ்வம்
பனித்தேங்கல் தனித்தேங்கல் அவர்கட் கில்லை.
முருகன்கடித் தான்வள்ளிக் கிழங்கை. இல்லை
முத்துப்பேட் டைச்சுற்றிப் பட்டுக் கோட்டை.

விளையாட்டுப் போட்டிகளில் வென்று, தங்க
வேல்பரிசு பெற்றுவர அனுப்பி வைத்தோம்.
வளையாட்டுக் கரத்தாளைக் கொண்டு வந்தாய்.
வாசப்பூக் கொடிவரட்டும் தோட்டத் துக்கு.
புலிபிடித்து வரச்சென்றாய் நீயோ பொன்னம்
புலிபிடித்து வந்துள்ளாய். வருக என்று
அளிமாலை போட்டுவர வேற்றூர், ட்ராயில்
அண்ணனொடு, தந்தை,மற் றனைத்துள் ளோரும்.

கனிப்பாரம் மரங்களுக்கும், பெண்டிர் என்ற
கரும்பாரம் ஆடவர்க்கும் —இவ்வா றானால்,
இனிப்பாரம் பிக்காதா பிறகு? நீளும்
இரவுகளில் தொடராதா உறவு? சற்றே
இனிப்,பார்என் பார்நாணிக் குனிந்த பெண்ணை.
இனிப்,பார்வை போதாது என்பார் செவ்வாய்
இனிப்பார்,மெல் லிதழில்இதழ்ப் பாரம் போட்டு.
இனிப்,பாரில் வேறெதுவும் வேண்டா மென்பார்.

பார்வைகளைப் பகிர்ந்துகொண்டும், பட்டுக் கட்டில்
படுக்கைதனைப் பகிர்ந்துகொண்டும்— நெருக்கத் தாலே
வேர்வைவினை செய்திட்டார். மெய்ப்ப யிர்க்கு
மெய்வேலி தனைப்போட்டுக் கொண்டி ருந்தார்.
நீர்தேன்என் ருள்நெய்என் ருள்என் பாலே
நிதம்வருக எச்சில்மது பருக என்ருள்.
ஆருயிரே ஓருயிரே நாமென் ருள், பின்
அமணசம யமாமிரவில் அசைவ ராஞர்.

நதியின்கை நீளுவதால் விளையும் நன்செய்.
மதியின்கை நீளுவதால் குளிரும் பூமி.
பதியின்கை நீளுவதால் கனிவாள் நங்கை.
பாரிசுடன் பரிசுப்பெண் கண்ட இன்பம்
மதுஎனிலோ புளித்ததில்லை. கதவில் லாப்பூ
வாசல்தேன் என்ருலோ மறுத்தற் கில்லை.
அதர்மத்தின் நிழலிலவர் கனவு கண்டார்.
அதரசுகம் இதரசுகம் பெருக்கிக் கொண்டார்.

திரும்பிவந்த மெனிலேயஸ், உயிரில் லாத
தேகக்கூட் டைவீட்டில் கண்டான். வெற்றுத்
திரியிருக்கால் திரியில்லை ஒளியாய்! நெஞ்சைத்
தீக்கௌவ, அலையலையாய் விழுந்த டித்து
விரைந்தோடித் தேடுகிருன். ஊகூம் கிள்ளை
வெளியேறி விட்டதுதன் கூண்டை விட்டு.
புரிந்துகொண்டான்; விளையாட்டு வீரன் மீண்டு
போகையிலே பரிசோடு போஞன் -என்று.

நாடகமே டைக்கணிகை பிரிவ துண்டு.
நாடுஅகமே டைமனைவி பிரிய லாமா?
மாடிமிசை இல்லாமல், வந்த மாற்றான்
மடிமீது விழலாமோ? எப்ப டித்தான்
சூடிவிட்டான் மாற்றான்பூந் தோட்ட மல்லிப்
பூமாலை தனைத்தனது தோளி ரண்டில்?
நீடிக்கும் துணைத்தூக்கம் என்றி ருந்தேன்.
நெருக்கத்தில் முடியுமென்று நினைத்தே னில்லை.

லேசான கனவுகளும், மயக்கக் காம
லீலைகளும், சேலைகளும் அவிழ்கல் யாண
ஆசார நெறிமுறையும் கடைப்பி டிக்க
ஆதாரம் அவளல்லா தாராம்? மாம்ச
ஈசேர இடங்கொடுக்கும் பூப்போல் அந்த
எதிரியுடன் காமப்பால் பயில லாமா?
கூசாது கொள்ளையிட வந்தான் என்றால்
கூடப்போ னவளுக்கும் இலையா மூளை?

அகமெம்னன்! அச்சில்லிஸ்! க்ரேக்க நாட்டு
அன்பர்களே! எனக்கல்ல. நம்இி னத்தின்
புகழுக்கே வந்துள்ள கேடி தாகும்.
புரிந்துகொள்வீர். புறப்படுவீர். வரலாற் றில்நாம்
நகப்படவேண் டாம்என்றால் ஓடிப் போன
நங்கைதனை மீட்டுவந்தே ஆக வேண்டும்.
சுகப்படுக்கைத் தூக்கத்தைக் கொஞ்ச நாட்கள்
சுருட்டிவைப்பீர்—எனஅழைத்தான். புறப்பட் டார்கள்!

விதைமீது சதைமுற்று கைந டத்தி
விளைகிறது இனிக்கின்ற பழம்.ப ழப்பெண்
சதைமீது முற்றுகையிட் டிருந்த பட்டுச்
சரிகைச்சே லேகளைந்து, பாரிஸ், தானே
அதிரசமுற் றுகைபோட்டுக் கொண்டி ருந்தான்.
அவன்சொந்த ட்ராய்நாட்டு மதிலேச் சுற்றிப்
புதுமுற்று கைபோட்டார் க்ரேக்கர். ஆண்டு
போயிற்று ஒவ்வொன்ருய். வென்ருர் இல்லே.

அச்சில்லிஸ் கொலேப்பட்டான். பாரிஸ் அண்ணன்
அதிவீரன் ஹெக்டாரும் கொல்லப் பட்டான்.
எச்சில்இலேப் போராட்டத் தில்மேன் மேலும்
எத்தனேயோ பேர்செத்தார். பெண்டிர் பார்வை
நச்சம்பும் நகில்கூரும் உருவிப் பாயும்
நாயகனும் பாரிசது மார்பில் ஓர்நாள்
அச்சமற்ற சாவாய்த அம்பு பாய,
ஆகாயத் தைப்பார்த்து வீழ்ந்தான் மண்ணில்.

'கிளி ஊர்வ சி, என்றென்னே அழைத்து வந்தீர்.
கி(ள்)ளிஊர்!வ சிஎன்ருேடென் றழைத்தீர் நித்தம்.
வெளியூர்ப்பெண் என்ருேடு சாமக் காம
வேள்விசெய்த வேந்தேநீர் முடிந்தா போனீர்?
குளிப்பதற்கு வந்தவர்கள், ஆற்றை விட்டுக்
குடஞ்சுமந்து திரும்பிடுவர். உங்கட் கென்னே
அளிப்பதற்கு வந்தவள்நான். திரும்பு வேனு?
அடியாள்உம் தம்பியொடு துணேயி ருப்பேன்.'

எக்கோ, கல் லோஎன்ற வலிமை யுள்ள
இளவீரன் டைபோபஸ், ஹெலனி னோடு
கொக்கோக ஆராய்ச்சி இரவி லேயும்
கொலைப்போரைப் பகல்களிலும் நடத்தி வந்தான்.
நிற்காத போர்நின்ற தொருநாள். ட்ராயின்
நெடுமதில்கள் வீழ்ந்தன. வென் ருர்கி ரேக்கர்.
இக்கோ, தன் னைக்கடிக்க, மெனிலே யஸ்கோ
னிடம்மீண்டும் ஒப்படைத்துக் கொண்டு விட்டாள்.

பூங்கொத்தொன் றைத்தந்தாள் ஹெலன்; இப் பூக்கள்
புல்வண்டுப் பன்மையினுல் புன்மை யாமோ?
ஏன்ங்கத்தான்? என, அவனே, நீஇல் லாமல்
ஏங்கத்தான் உன்அத்தான் என்ருன். உப்பு
தேங்குகடல் நீர்வெளியே றலிலை நானும்
தேவரீ ரைவிட்டுப் பிரிவ தில்லை
தீங்கடியோ டொழியட்டும் தாங்கள் தா'ங்கள்
தீங்கடிமுத் தங்கள், தங் கள்எனக் கென்ருள்.



# நன்னன் கடித்த கன்னல்

அவள்குளித்துக் கொண்டிருந்தாள். ஆற்றில் தங்க
ஆணிஅடித் ததுபோல நின்றும், நீந்தும்
கவியோலை போல்எதிர்த்தும், சந்த னத்துக்
கட்டுமரம் போல்மிதந்தும், மீனைப் போலக்
கவிழ்ந்தும்,பின் படகைப்போல் நிமிர்ந்தும் நீந்தி—
கண்சிவக்க நீராடிக்கொண்டி ருந்தாள்,
அவிழ்த்துவைத்த புடைவையும் நீலச் சாய
ஆகாய மும்அவட்குச் சாட்சி யாக!

கங்கையோ காவிரியோ மேற்கு ஓரக்
கடல்கலக்கும் நர்மதையோ எலாம்,அ வட்குத்
தங்கையோ அக்காவோ தானே! ஏதும்
சங்கோசம் இருக்குமா அவர்க்குள்? சற்றும்
தங்குதடை இருக்காதே ஒரேவ குப்பு
ரத்தங்கள் கலப்பதற்கு! எழுந்து மூழ்கும்
சங்கப்ப லகைபோல அவளும் அப்பொன்
தாமரைக்கு ளம்போல்அவ் ஆறும் ஆனார்.

குருடர்கள்போய்ப் பார்த்தஒரு யானை போல
குமரியிருந் தாள்ஆற்றின் நடுவே! ஆற்றுத்
திரவத்துக் கள்திறந்த புத்த கம்! அச்
சித்திரத்தை நீர்கலைக்க முடிவ தில்லை.
ஒருவனுடன் ஒருத்தியிருக் கையிலே அன்னார்
ஊடேஏ தும்திரைகள் இருப்ப துண்டா?
இருக்கின்ற அழுக்குகளை ஒப்புக் கொண்டு
இழப்பதற்கு வந்தஅவள் ஒளிப்ப துண்டா?

உனக்காக நான்என்றும், எனக்கா கத்தான்
உயிர்நிலையே நீஎன்றும் சொல்லிக் கொண்டு
கனவினிலே வருவதன்றி, எந்த ஆணும்
கன்னிகையைத் தொடாததனால், அவள்உ டம்பில்
இனும்எழுதப் படவில்லை நகக்க தைகள்!
இனும்அவள்பல் கலைக்கழகம் ஆக வில்லை!
எனவேஅத் தண்ணீர்பால் சொல்லிக் கொள்ள
ஏதுமில்லை காதல்கதை அவளி டத்தில்!

ரத்தத்தில் பிறக்கின்றோம். சுரக்கும் காம
ரசத்தினிலே கலக்கின்றோம். உதடு போடும்
முத்தத்தில் எச்சில்ஆ கின்றோம்! ஆற்றில்
முட்டும்நீ ரால்சுத்த மாகின் றோம்!பின்
அத்தமன நேரத்தில் மருத்து வத்தின்
ஆய்வுக்குட் படுகின்றோம். முடிந்தால், கொள்வோம்
வெட்டுப்பள் ளப்படுக்கை. இவையெல் லாமே
வெட்கத்துக் கிடமில்லா இடங்கள் அன்றோ?

அவள்குளித்துக் கொண்டிருந்தாள். அவளைத் தொட்ட
ஆற்றுத்தண் ணீர்பிரிய மனமில் லாமல்
தவழ்ந்ததுதன் வழிநோக்கி. புதிய தண்ணீர்
சந்திக்க வந்ததவள் பக்கம். நீரில்
சுவைப்பந்தாம் பழம்ஒன்று மிதந்து வந்து
சுகப்பந்தைத் தொட்டுவிட்டு நிற்க, கண்ட
அவள்அதனை எடுத்திட்டாள் கடித்துப் பார்த்தாள்.
ஆகாஎவ் வளவுசுவை என்றாள். தின்றாள்.

நீரும்நா னும்வேறு வேறா னாலும்
நீந்துகையில் ஒன்றானோம் என்ற வாறு
நீராடி முடித்திட்ட மா(து)எ ழுந்து
நெடுங்கரைக்கு வந்திட்டாள். தனித்தி ருந்த
சீராடை யைஎடுத்து அணிய லானாள்.
சீதைக்குச் சிலநிமிடம் நெருப்பே ஆடை.
வேருக்கு எப்போதும் மண்ணே ஆடை.
வெளிச்சத்தை அணிதல்முத லிரவி லேதான்!

குளம்புக்கால் குதிரைகளின் சத்தம், வீரர்
மிதிக்கின்ற சத்தம், கேட்(டு) அவள்நி மிர்ந்தாள்.
பளிங்குப்பெண் ணே!ஆற்றில் மிதந்து வந்த
பழத்தைஏன் நீதின்றாய்? அதைப்பி டிக்க
களைப்படையும் வரைதொடர்ந்து வருகின் றோமே!
கடைசியிலே கிடைக்காமல் செய்திட் டாயே!
துளைப்பானே! தலைப்பாரம் தோட்கி ராதே!
தொடர்!என்று குதிரைமேல் ஏற்றிச் சென்றார்.

நீலமணி

கன்னன்தன் குண்டலத்தைத் தந்தான். தந்த
கைக்குமணன் தலையையே தரத்து ணிந்தான்.
அன்ருெருநாள் சிபிஎன்பான் சதையைக் கூட
அறுத்தளித்தான்- இல்லையா? இந்நாட் டில்தான்
நன்னன்-நான் இருக்கின்றேன்! ஒருக னிக்கு
நான்உன்னைச் சிறைபிடித்த தேன்என் ருல்பூங்
கன்னிகையே! அதுநீண்ட கதை!சொன் ஞல்தான்
காரணம்பு ரியக்கூடும் உனக்கு! என்ருன்.

ஆண்டொன்றுக் கொருபழமே பழுக்கும், இந்த
அதிசயமு லிகைமரத்தில். இப்ப ழத்தை
ஆண்டொன்றுக் கொருதடவை உட்கொண் டால்தான்
ஆளவந்த என்மனைவி உயிர்த ரிப்பாள்.
தீண்டியதோர் நோய்அவளை. இப்ப ழந்தான்
தீராமல் காத்துவந்த(து) அவளை. இன்ருே—
தாண்டிப்போ கப்போகின் ருள்!ப ழத்தால்
தாங்கிவந்த உயிர்இன்று நீங்கும். பார்ப்பாய்!

உழைக்காமல் கிடைப்பதெல்லாம் அரச னுக்கே
உரியதென்ற சட்டம்நீ அறியாய் போலும்!
பழம்,உன்மேல் பந்தடித்த தென்ருல், கொண்டு
பத்திரமாய் என்னிடந்தந் திருக்க வேண்டும்!
அழுத்திக்க டித்ததையா தின்ருய்? என்றன்
ஆனந்தத் தைஅன்ருே தின்று விட்டாய்!
கழுத்துக்கட் டுத்தாலி மனைவி என்றன்
கட்டிலிலா— தரையிலன்ருே படுத்துக் கொள்வாள்?

பால்காம்பே மூக்காகக் கொண்ட தேமாம்
பழம்இரண்டு வைத்திருந்தும், மண்ணைத் தோண்டும்
வேர்க்காலில் உறவாடி, விழிப்ப தற்கு
விதைதங்கும் பலாப்பழமும் வைத்தி ருந்தும்
ஊர்க்குருவி கொத்துகின்ற ஜோடிக் கோவை
உதடாக வைத்திருந்தும்— இப்ப ழத்தை
நீகடித்துத தின்றதுஏன்? என்ப ழத்தை
நீதின்றாய்! நான்உன்னைத் தின்பேன்!— என்றான்.

EVELYN RUTN A INSTI UTE
180
REFERENCE
LIBRARY
JAFFN